வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 08.12.2021 புதன்கிழமை | இதழ் : 03 | பக்கங்கள் : 16




## 14,500ஐ கடந்தது கொரோனா பலி!

கொழும்பு, டிசெ. 08
நாட்டில் நேற்றுமுன்தினம் கொரோனா தொற்றால் மேலும் 21 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று அறிவித்தது.

இதன்படி, 30 - 59 வயது பிரிவில் 4 ஆண்களும், ஒரு பெண்ணுமாக 5 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 7ஆண்களும், 9 பெண்களுமாக 16 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றுக் காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 14,505ஆக உயர்வடைந்தது. (ஐ)

# புதுடில்லி பயணத்தை சம்பந்தன் ஏன் பிற்போட்டார் என தெரியாது!



## கைவிரிக்கிறார் மாவை சேனாதிராசா

யாழ்ப்பாணம், டிசெம்பர் 08

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணத்தை பிற்போடுமாறு தலைவர் இரா. சம்பந்தனே நேரடியாக இந்தியத் தூதரகத்திடம் கோரியுள்ளார். அவர் ஏன் அவ்வாறு கோரினார் என்பது எனக்கு தெரியாது. எனது மகனின் திருமணத்தை முன்னிட்டு கூட்டமைப்பின் இந்தியப் பயணம் ஒத்திவைக்கப்பட்டதாக வெளிவரும் செய்திகள் பொய்யானவை. நான் பங்கேற்காவிட்டாலும் இந்த சந்தர்ப்பத்தை தவறவிட வேண்டாம் என கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களிடம் நானே கோரியிருந்தேன்.”

-இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா.

15

## இனப்பரம்பலை மாற்றியமைக்கவா உலக வங்கி உதவி வழங்குகின்றது?

### பாராளுமன்றத்தில் கஜேந்திரன் கேள்வி

கொழும்பு, டிசெ. 08
தமிழர்களின் இனப் பரம்பலை மாற்றிய மைத்து தமிழ் தேசத்தின் இருப்பை இல்லாமல் அழிப்பதற்கான வேலைத் திட்டங்களுக்காகவா உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட

15

## வன ஜீவராசிகள், வனப்பாதுகாப்பு திணைக்களங்கள் எதற்காக உள்ளன?

### கேள்வி எழுப்புகின்றார் சித்தார்த்தன்

கொழும்பு, டிசெ. 08
இடிந்த தமிழ் பாடசாலைக் கட்டடங்கள் உள்ள இடங்கள்கூட காட்டுப்பிரதேசங்கள் என்று ஒதுக்கப்படுவதுடன் 6 அடிக்கு மேற்பட்ட மரங்கள் ஓர் இடத்தில் இருக்குமென்றால் அந்த இடம் காடாக ஒதுக்கப்

15

## இன்று முதல் சபை அமர்வுக்கு செல்லும் எதிரணி எம்.பிக்கள்

கொழும்பு, டிசெ. 08
ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று முதல் மீண்டும் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள தீர்மானித்துள்ளனர்.

நேற்று பிற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுடன் இடம்

15

### ஈழத் தமிழருக்காக குரல்கொடுத்த

## தென்னாபிரிக்காவின் அரசியல்வாதி மரணம்!



கேப்டவுன், டிசெ. 08
ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்து வந்த தென்னாபிரிக்காவின் முன்னாள் பிரதி அமைச்சர் இப்ராஹிம் இஸ்மாயில் இப்ராஹிம் காலமானார்.

15



## உயர்நீதிமன்ற புனரமைப்புக்காக ரூ. 768 கோடி வழங்கியது சீனா!

கொழும்பு, டிசெ. 08
உயர்நீதிமன்ற கட்டடத் தொகுதியை புனரமைப்பதற்கு சீன அரசாங்கம் 768 கோடி ரூபாயை வழங்கியுள்ளதாக நீதி அமைச்சு நேற்று தெரிவித்தது.

நீதி அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயதுன்னை, சீனாவின் பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்களுக்கான ஆலோசகர் லீ குவாங்ஜூன்ட ஆகியோர் சீன தூதரகத்தில் இந்த ஒப்பந்தத்தில் கைச்

15

## திட்டமிட்ட முறையில் எமக்கு அநீதி இழைக்கப்படுகிறது

### சஜித் மீது கூட்டமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 08
வரவு - செலவுத் திட்டத்தில் அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தை ஆரம்பித்து வைக்கும் எதிர்க்கட்சிகளின் எம்.பிக்களின் பெயர் பட்டியலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை திட்டமிட்டு புறக்கணித்து எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

15

## பாராளுமன்றத்தில் சொன்னதை ஊடகங்களுக்கு சொல்ல முடியுமா?

### சுமந்திரனுக்கு அமைச்சர் டக்ளஸ் சவால்

கொழும்பு, டிசெ. 08
வடக்கில் தொழிலில் ஈடுபடும் 500 இழுவை வலை படகுகளிடமிருந்தும் நான் ஓர் இரவுக்கு ஒரு படகிடமிருந்து 5000 ரூபாய் கப்பமாக பெறு

15




**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது!

இந்தப் பத்தியை எழுதுவதால் எந்த பலனையும் யாரும் அடைந்துவிட முடியாது. அதற்கான சூழலும் தமிழ் அரசியல் பரப்பில் இல்லை என்பதால், இதனை எழுதுவது எனதும் உங்களதும் நேரத்தை வீணடிப்பதாகவே உணர்ந்து கொண்டதால் இதனை எழுத மனது இடம் தரவில்லை.

அதனால்தான் இந்த ஊர்க்குருவி நம்மத்தியில் பறந்து திரிவதையும் சிலகாலம் நிறுத்தியிருந்தது.

ஆனால், இங்கு நடக்கும் அரசியல் தில்லுமுல்லுக்களை அறிகின்ற போது இரத்தக் கொதிப்பு ஏற்படாத குறை.

கனடாவிலிருந்து ஊடக வசிஷ்டர் ஒருவரும் இன்னுமோர் ஊடக விற்பன்னரும் தகவல் அனுப்பினார்கள். ஊர்க்குருவியை உசுப்பேத்தினார்கள் என்று கூட சொல்லலாம்.

"வரவே வராதா மகிழ்வே தராதே வாழ்வில் உன்னை காணும் நாள் ! உன்னாணை (மனச்சாட்சியை ) ஊர் குருவியை ஒருக்கால் கேளப்பு."

என்று நண்பர் ஜெகதீசன் கனடாவிலிருந்து கேட்டிருந்தார்.

அவரின் கேள்விக்கு பதில் கொடுக்கவேண்டும் என்பதற்காகவாவது எழுதவேண்டும்போல இருந்தது.

இன்று இதனை எழுதுவதென்றால் நிச்சயம் எதைப்பற்றி ஊர்க்குருவியர் - எழுதுவார் என்பதும் வாசகர்களுக்கு தெரியாததல்ல.

இந்தியப் பிரதமர் மோடியின் அழைப்பைக் கூட்டமைப்பின் தலைவர் தவிர்த்துக்கொண்ட விடயம் குறித்து எழுதுவதெனில் இந்தப் பத்தியில் தொடர் கட்டுரை எழுதவேண்டியிருக்கும். எழுதவேண்டி வருமோ தெரியவில்லை.

முதலில் இந்தியா கூப்பிட்டதும் நாங்கள் போகவேண்டுமா? என்று கூட சிலர் முகநூலில் காறித் துப்பிக்கொண்டிருக்கின்றனர்.

அதனை புலிகளின் தலைவர் முப்படைகளுடன் இருந்த போது கேட்டிருந்தால் அது நியாயமானதுதான். ஆனால், இன்று எப்போது சர்வதேசம் வரும் என்று 'இலவு காத்த கிளிபோல' காத்திருக்கும் ஒரு சமூகம் இப்படிக் கேட்க முடியுமா என்பது பற்றி சிந்திக்கவேண்டும்.

அட, சிந்திக்கவேண்டும் என்கிறீர்களே, சிந்திப்பது என்றால் என்ன என்று யாரும் கேட்டால் அதற்கு நான் பாத்திரவாளியல்ல.

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்ட'மேதை'கள் குழு ஒன்று அமெரிக்கா சென்றிருந்தது. அதில் ராசபுத்திரன் சாணக்கியன் ராகுலும் ஏன் இடம் பெற்றிருந்தார் என்பது தனியொரு பத்திக்குரியது.

இந்தச் சந்திப்பில் உலகத்தமிழர் பேரவையும் கடைசி நேரத்தில் இணைந்துகொண்டது. கூட்டமைப்பின் கோரிக்கையின் பேரில்தான் அவர்களும் சந்திப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல. ஆனால், அது கடைசி வரை இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. அமெரிக்க இராஜதந்திரம் என்றால், அது தமிழர் தலையில் மற்றுமொரு மிளகாய் அரைப்புத்தான்.

கூட்டமைப்பு இன்று எவ்வாறு தமிழ் மக்களின் செல்வாக்கை இழந்த பின்னரும் தமிழர்களின் தலைமையில் அமர்ந்திருக்கிறதோ, அதேபோலவே இன்று உலகத் தமிழர் பேரவையும் இருக்கிறது என்பதும் இரகசியமானதல்ல.

விடயம் அதுவல்ல இப்போது.

அமெரிக்கா சென்று வந்த கூட்டமைப்பு, தாயகம் திரும்பியதும் கூறிய சங்கதி கவனத்திற்குரியது.

இலங்கைத் தமிழர் இனப்பிரச்னைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண இந்தியாவுடன் இணைந்து ஊக்கத்தைக் கொடுக்குமாறே கூட்டமைப்பு அமெரிக்கா விடம் கேட்டிருந்தது.

பிரச்னைக்கு எந்த வகையில் தீர்வு காணலாம் என்பதை விளக்குவதற்காக சட்ட நிபுணர்களை அனுப்புவதாகக் கூறிய கூட்டமைப்பு, அமெரிக்காவிலிருந்து திரும்பியதும், இந்தியாவுடன் ஊக்கத்தைக் கொடுக்க வலியுறுத்தியதாக கூறியது கவனிக்கப்படவேண்டியது.

நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுக்கள் நடந்தபோதும் அமெரிக்காவின் பங்களிப்பு தெரிந்ததுதான். அப்போதும், பேச்சுக்கு வந்த நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஒவ்வொரு தடவையும் கொழும்பு வந்து ஒஸ்லோ திரும்பும் போதும் டில்லிக்கு சென்று திரும்பியது ஏன் என்பதும் நமக்கெல்லாம் தெரிந்ததுதான்.

இந்தியாவை தவிர்த்து எந்த ஒரு நாடும் நமது பிரச்னையில் தலைநுழைக்கப் போவதில்லை என்பதற்கு அவை சான்றுகள்.

அத்தகைய முக்கியத்துவம்மிக்க இந்தியாவின் அழைப்பை நொண்டிச்சாட்டுக்கள் சொல்லி தலைவர் சம்பந் தன் ஒத்திவைக்கக் கேட்டது ஏன் என்பது புரியாத புதிர். நமக்கு மட்டுமல்ல, சம்பந்தனின் தளபதி சுமந்திரனுக்கும் இது புரியாத புதிராகத்தான் இருக்கும்.

நடந்தவை பற்றி நாளை பேசுவோம்.

**- ஊர்க்குருவி.**

## வடக்கில் நேற்று 10 தொற்றாளர்கள்



யாழ்ப்பாணம், டிசெ. 08

வடக்கு மாகாணத்தில் நேற்று 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ். போதனா மருத்துவ மனையின் ஆய்வுகூட அறிக்கையிலேயே இந்த விடயம் வெளியானது.

நேற்றைய தினம் ஆய்வு கூடத்தில் 155 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதிலேயே 10 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, யாழ். போதனா மருத்துவமனையில் 3 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும் என யாழ். மாவட்டத்தில் ஐவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் 3 பேருக்கும், முல்லைத்தீவு விமானப்படை முகாமில் ஒருவருக்கும், வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

## தொற்றிலிருந்து 423 பேர் குணம்!

கொழும்பு, டிசெ. 08

கோவிட்-19 தொற்றுக்குள்ளான மேலும் 423 நபர்கள் பூரண குணமடைந்து வைத்திய சாலைகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அதனால் நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 43 ஆயிரத்து 111ஆக அதிகரித்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்களில் தற்சமயம் 10,828 கொரோனா நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

## கொட்டடியில் குண்டு மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 08

யாழ்ப்பாணம் நகரை அண்டிய கொட்டடியில் தனியார் காணியில் மோட்டார் குண்டு ஒன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டது.

மீனாட்சி அம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள அந்தக் காணியை உரிமையாளர் சுத்தம் செய்தபோதே குறித்த குண்டு அடையாளம் காணப்பட்டது.

இதையடுத்து, காணி உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். இதையடுத்து, நீதிமன்ற அனுமதியைப் பெற்று அந்த மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ - 5)

## கல்வி tv CHANNEL-1

**08.12.2021 புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மாதிரி வினாத்தாள் மறுஒளிபரப்பு-LIVE கணிதம் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**08.12.2021 புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
08.12.2021 புதன்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# யாழ். சந்திப்பின் இரண்டாம் கட்டம்?

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் டி. பி. எல். எவ். (புளொட்) ஆகியவற்றின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சந்திப்பானது, அந்த நேரத்தில் அதிக கவனிப்பை பெற்றிருந்தது. எனினும், அதன் பின்னர் இடம்பெற்ற சுமந்திரன் தலைமையிலான நிபுணர் குழுவின் அமெரிக்க பயணத்தை தொடர்ந்து, பங்காளிக் கட்சிகளின் முயற்சி இரண்டாம் நிலைக்கு சென்றது. இதற்கிடையில் குறித்த சந்திப்பு தொடர்பிலும் அதனடிப்படையில் முன்நோக்கி செல்வது தொடர்பிலும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர்கள் கலந்துரையாடியிருந்தனர். ஆனால், யாழ். சந்திப்பின் அடுத்த கட்டம் தொடர்பில் இதுவரையில் எந்தவொரு நகர்வும் இடம்பெறவில்லை. கூட்டமைப்பின் தலைவரை சம்மதிக்கச் செய்யும் முயற்சியில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் ஈடுபடாமல், ரவூப் ஹக்கீமும் மனோ கணேசனும் ஈடுபட்டமை சம்பந்தனிலிருந்து எவ்வளவு தூரம் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் விலகியிருக்கின்றனர் அல்லது விலக்கி வைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதையே காண்பிக்கின்றது.

கூட்டமைப்பின் அரசியல் நகர்வுகளைப் பொறுத்தவரையில், சம்பந்தனை தவிர்க்கும் எந்தவொரு முயற்சியும் அதற்குரிய அங்கீகாரத்தை பெறாதென்னும் அபிப்பிராயம் உண்டு. இதுவரையில் இது ஓர் அரசியல் ஒழுங்காகவே இருந்து வருகின்றது. எனினும், பங்காளிக் கட்சிகளின் ஏற்பாட்டில், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் கட்சிகளும் இணைந்து ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம் அனுப்பிய விவகாரத்தின்போதே முதன்முதலாக மேற்படி ஒழுங்கு உடைக்கப்பட்டது. அதன் பின்னர் தமிழ் அரசு கட்சியின் பங்குபற்றுதல் இல்லாமலேயே யாழ்ப்பாணத்தில் குறித்த சந்திப்பு இடம்பெற்றிருந்தது. இந்த சந்திப்பின் முடிவில் சம்பந்தனையும் இணைத்துக் கொண்டு பயணிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டபோதிலும், இதுவரையில் சம்பந்தனிடமிருந்து சாதகமான சமிக்ஞை வழங்கப்படவில்லை.

இந்த நிலையில், குறித்த சந்திப்பு அதன் இலக்கை எட்டுமா அல்லது இல்லையா என்னும் கேள்வியெழுந்திருக்கின்றது. இந்தியாவிடம் ஒரு கோரிக்கையை முன்வைப்பதுதான், குறித்த சந்திப்பின் இலக்காகும். அவ்வாறானதொரு கோரிக்கையை முன்வைக்க வேண்டியதில்லை என்னும் நிலைப்பாட்டில் சம்பந்தன் இருப்பதாகத் தெரிகின்றது. இந்த நிலையில் சம்பந்தனையும் இணைத்துக் கொண்டு குறித்த விடயத்தை நகர்த்த முடியுமா?

சம்பந்தனின் அண்மைக்கால தீர்மானங்கள் எவற்றிலுமே பங்காளிக் கட்சிகள் கருத்தில் கொள்ளப்பட்டவில்லை. அமெரிக்க பயணத்திற்கான நிபுணர் குழு விடயத்தை பத்திரிகைச் செய்திகளின் வாயிலாகவே பங்காளிக் கட்சிகள் அறிந்திருந்தன. இந்திய பிரதமருடனான சந்திப்பை சம்பந்தன் தன்னிச்சையாகவே பிற்போட்டிருந்தார். ஆகக் குறைந்த கட்சி நாகரிகம்கூட இதில் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் பங்காளிக் கட்சிகள் எவ்வாறு சம்பந்தனுடன் இணைந்து விடயங்களை முன்னெடுக்கப் போகின்றன? அது இயலுமான காரியமா?

நாடு நெருக்கடிக்குள் இருக்கின்றது என்பது வேறு விடயம். ஆனால், இந்த நெருக்கடியான நிலைமைக்குள்ளும், தமிழ் மக்கள் தொடர்பான அரசாங்கத்தின் அடிப்படையான அணுகுமுறைகளில் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை. இந்த பின்புலத்தல் சிந்தித்தால், தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் மிகவும் நெருக்கடிக்குள் இருக்கின்றது. ஏனெனில், தென்னிலங்கைக்கு ஓர் அரசியல் வரலாறுண்டு. அதாவது, சிங்கள ஆளும் வர்க்கம் எப்போதெல்லாம் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றதோ - அப்போதெல்லாம் தங்களின் இயலாமையை மறைப்பதற்கும், சிங்கள மக்களை திசைதிருப்புவதற்கும் தமிழர் விரோத முடிவுகளிலேயே அவர்கள் சரணாகதியடைவதுண்டு.

இப்போதும் அவ்வாறானதோர் அரசியல் சூழலே தென்பகுதியில் தெரிகின்றது. ஆனால், இப்படியான இக்கட்டான சூழலிலும் கூட, சம்பந்தன் விடயங்களின் தீவிரத்தை உணராதவராக இருக்கின்றார். ‘ரோம் எரிந்து கொண்டிருந்தபோது பிடில் வாசித்துக் கொண்டிருந்த’ கதையை நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றார். எனவே, பந்து இப்போது பங்காளிக் கட்சிகளின் தலைவர்களிடம்தான் உண்டு. சம்பந்தனின் சாய்மனை கதிரையின் அசைவை பார்த்துக் கொண்டிருக்கப் போகின்றார்களா? அல்லது சுயமுடிவின் அடிப்படையில் இயங்கப் போகின்றனரா?

# அஹிம்சாவாதி மகாத்மா காந்தி அவதரித்த இந்தியாவில் ஏ. கே.-203 ரைபிள் தொழிற்சாலை!

**அலசுவது இராஜதந்திரி**

*இந்தியா மிகப்பிமாண்டமான முறையில் தனது ஆயுத பலத்தை அதிகரிக்க முன்வந்துள்ளது. இதற்கென ரஷ்யாவுடன் ஒப்பந்தமொன்றை இந்தியா செய்துள்ளது. ரஷ்யாவின் தேசிய ஆயுதமான ஏ. கே. - 47 ரைபிள் துப்பாக்கியின் தற்போதைய நவீன தயாரிப்பான ஏ. கே.- 203 ரகம் இந்தியாவின் உத்தரபிரதேசம் மாநிலத்தில் கொர்வா என்ற இடத்தில் அமையவுள்ள தொழிற்சாலையில் தயாராகவுள்ளது.*

*இந்திய அமைதிப் படையினர் இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுலாக்க வந்திறங்கியபோது, யுத்த தாங்கிகள் தவிர, அவர்களின் கைகளில் இந்தியாவில் பிரிட்டிஷார் காலத்தில் வழக்கிலிருந்த ஆயுத ரகங்களே காணப்பட்டிருந்தன.*

*இத்தகைய பழைமையான ஆயுதங்களும் இந்திய அமைதிப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து பெரும் சவால்களை எதிர்கொள்வதற்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது.*

*இந்திய அமைதிப் படையினரிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை இந்திய - இலங்கை அமைதி ஒப்பந்தம் கைச்சாத்தானதையடுத்து கையளித்திருந்தனர். அந்த ஆயுதங்கள் பலவும் இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியாவில் பயிற்சி நடவடிக்கைகளின்போது பெற்றுக் கொண்ட ஆயுதங்கள் மற்றும் இலங்கையில் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களாகவே இருந்தன.*

*இப்பழைமையான ஆயுதங்களின் அடிப்படையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுத பலத்தை இந்திய இராணுவ புலனாய்வாளர்கள் எடை போட்டிருந்தனர்.*

*ஆனால், தமது ஆயுதக் கையளிப்பின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் வைத்திருந்த பழைமையான ஆயுதங்களிலிருந்தும் வேறுபட்டவையாக ரஷ்யாவின் ஏ. கே. - 47 துப்பாக்கிகள் உட்பட அமெரிக்காவின் எம். -16 ரக தன்னியக்க ரைபிள்கள் மற்றும் பல்கேரிய நாட்டுத்துப்பாக்கிகள் எனப் பலதரப்பட்ட ரகங்களிலுமான நவீன துப்பாக்கிகள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் காணப்பட்டிருந்தன.*

*இந்திய அமைதிப் படையின் ஒரு தொகுதி கமாண்டோக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் யாழ்ப்பாணத்தின் கொக்குவில் பிரதேசத்தின் பிரம்படிப் பிரதேசத்தில் தங்கியிருந்தவேளை அவரை கொன்று அல்லது உயிரோடு பிடிப்பதற்காக பலாலியிலிருந்து ஹெலிகொப்டர்களில் வந்து கொக்குவில் மயானத்தை அண்டிய மைதானத்தில் இறங்கிய போது அவர்களை தாக்குவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பாவித்த ஆயுதங்கள் மிக நவீனமான ஐரோப்பிய நாடுகளில் தயாரான ஆயுதங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்தியாவுக்கு இராணுவ தளபாடங்களை ரஷ்யா பன்னெடுங்காலமாகவே விநியோகித்து வருகின்றது. பிரதம மந்திரி இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் அன்றைய சோவியத் ரஷ்யா மிகத்தாராளமாகவே இந்தியாவுக்கு சிறிய ரக ஆயுதங்களை மட்டுமல்ல. கப்பல்கள், விமானங்கள், நீர் மூழ்கிக்கப்பல்கள் என்பவற்றைக்கூட வழங்கியிருந்தது.*

*இந்தியாவுக்கு ரஷ்யா வழங்கிய ஆயுத தளபாடங்களில் ‘அன்ரனோவ்’ போக்குவரத்து விமானங்கள், ‘மிக்’ போர் விமானங்கள் என்பவை முக்கியமானவையாகும். இந்த இரு ரஷ்ய ரக விமானங்களும், பிரெஞ்சுத் தயாரிப்பு ‘மிராஜ்’ போர் விமானங்களுமே வடக்கே ஒப்ரேஷன் லிபரேஷன் இராணுவ நடவடிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை ஆயுதப்படைகள் மேற்கொண்ட போது ‘ஒப்ரேஷன் பூ மாலை’ என்று பெயரிடப்பட்ட உணவு மற்றும் மருந்து பொதிகளை யாழ். குடாநாட்டுக்குள் போடுவதற்கென இந்தியா பயன்படுத்தியிருந்தது.*

*இந்நிலையில், தற்போது சீனாவுடன் அண்மைக்காலங்களில் ஏற்பட்ட பதற்றநிலை மற்றும் ஆப்கானிஸ்தானில் இஸ்லாமிய அடிப்படைவாத தலிபான்களின் ஆட்சி, இதுதவிர பாகிஸ்தானிடமிருந்து எழக்கூடிய அச்சுறுத்தல்கள் என்பவற்றை கருத்தில் கொண்டே நவீன ஏ. கே. - 203 தன்னியக்க ரைபிள் துப்பாக்கிகளை ரஷ்ய ஒத்துழைப்போடு உத்தரப்பிதேசத்தில் தயாரிக்க இந்தியா முன்வந்துள்ளது.*


*ஆரம்பத்தில் ஐந்து இலட்சம் ஏ. கே. - 203 ரக ரஷ்ய ரைபிள் துப்பாக்கிகள் இந்தியாவில் தயாரிக்கப்படும். இதன் பின்னர் படிப்படியாக இத்தொகை அதிகரிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.*

*ஏ. கே. -203 ரக ரஷ்ய துப்பாக்கிகள் மிகத் துல்லியமாக 300 மீற்றர்கள் தூரத்திலுள்ள இலக்குகளையும் தாக்கியழிக்கும் வல்லமை கொண்டவையாகும். அத்துடன், எடை குறைந்தவையாகவும் அதிகளவு தோட்டாக்களை நிரப்பி வைக்கக்கூடியவையாகவும் காணப்படுகின்றன.*

*ரஷ்யாவின் ஏ. கே. -47 ரகத்தை முதலில் கண்டுபிடித்தவர் மிக்கெயில் கலாஷ்நிக்கோவ்* (Mikhail Kalashnikov)*. இந்த ஆயுதத்தின் அசகாயசூரத்தனத்தை அவர் கண்ணுற்றபோது தாம் தவறிழைத்து விட்டேனோ என்றுகூட கருதினாராம்.*

*இதுதவிர, கத்தியின்றி இரத்தமின்றி அஹிம்சையை போதித்த மகாத்மா காந்தி பிறந்த இந்தியாவில் புதிய ஏ. கே. - 203 ரைபிள் தயாரிக்கும் தொழிற்சாலை அமையவிருப்பது உலகில் ஆயுத கலாசாரம் எவ்வளவு தூரம் வியாபித்துள்ளதென்பதையே எடுத்துக் காட்டுகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



டிசெம்பர் - 08 புதன்கிழமை
பிலவ வருடம் - கார்த்திகை - 22
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : பஞ்சமி



## இன்றைய ராசிபலன்

08.12.2021

**மேடம்**
உங்களுக்கு புதிய பொறுப்பு கிடைக்கலாம். சொத்து வாங்கும் முயற்சி கைகூடும். சகோதர, சகோதரி வாழ்வில் உயர்வு காண்பர். சேமிப்பு அதிகரிக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**இடபம்**
பணி, தொழில் சுமுகமாக நடக்கும். நிம்மதி அதிகமாகும். மற்றவர் விஷயங்களில் தலையிட வேண்டாம். நட்பு வட்டம் விரியும். நிதி நிலை மேம்படும். பேச்சினால் நன்மை அதிகரிக்கும்.

**மிதுனம்**
மற்றவர்களோடு இருந்த விரோத மனப்பான்மை நீங்கும். உழைப்பினால் ஆதாயம் பெறுவீர்கள். எடுத்துக் கொண்ட விஷயத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள்.

**கடகம்**
அலைச்சலை குறைத்துக் கொள்வது நல்லது. குதூகலமான நாள். திடீர் நன்மைகளை எதிர்பார்க்கலாம். யாருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். இன்று எதிலும் முதலீடு செய்ய வேண்டாம்.

**சிம்மம்**
கடினமாக உழைத்து பணியிடத்தில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். சிலருக்கு வெளிநாடு சென்று வேலை பார்க்கும் வாய்ப்பும், பதவி உயர்வும் கிடைக்கும்.

**கன்னி**
யாருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். எதிர்பார்த்த வங்கி கடன் கிடைக்கும். குடும்பத்தினர் நன்மை அடைவர்.நல்ல வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு சாதகமான பதில் வரும்.

**துலாம்**
சிலருக்கு எதிர்பார்த்தபடி குழந்தை பாக்கியம் கைகூடி வரும். தள்ளிப்போன சுபவிஷயம் இன்று நடக்கும்.குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். மன நிறைவு ஏற்படும்.

**விருட்சிகம்**
உயர்ந்தோரின் நட்பு உங்களுக்கு சந்தோசத்தையும், வருமானத்தையும் தரும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாக மாறும். மாற்றுக் கருத்துடையோர் மனம்மாறுவர். நட்பு வட்டம் விரிவடையும்.

**தனுசு**
பதவி உயர்வு பெறுவது பற்றிய செய்தி வந்து சேரும். மகிழ்ச்சி அதிகரிக்கும். பணியிடத்தில் சக ஊழியர்களால் ஏற்பட்ட மனக்குழப்பம் விலகும். நீண்ட நாள் பிரச்னை ஒன்று தீரும்.

**மகரம்**
பொறாமை காரணமாக யாரோடும் கருத்து வேற்றுமை வேண்டாம். கோபம், மனஅழுத்தம் இல்லாமல் அமைதியாக இருப்பது நல்லது. அலுவலகத்தில் உங்களுக்கு சாதகமான சூழ்நிலை உண்டாகும்.

**கும்பம்**
கடனை வசூலிப்பதில் தாமதம் ஏற்படும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பங்குச் சந்தை வர்த்தகத்தில் இன்று அதிக முதலீடு செய்ய வேண்டாம். கவனமாக வாகனம் ஓட்டுங்கள்.

**மீனம்**
சிலருக்கு வீடு வாங்கும் யோகம் உண்டு. மகிழ்ச்சி அதிகரிக்கும். அழகிய வாகனம் வாங்கும் முயற்சி இன்று வெல்லும். இன்று செய்யும் செலவுகள் சந்தோஷம் தரும். பண முடக்கங்கள் தீரும்.

# தமிழகத்தில் மீண்டும் பாடசாலைகள் மூடல்?

சென்னை, டிசெ. 08

தமிழகத்தில் பள்ளிகள் மீண்டும் மூடப்படுமா என்ற கேள்விக்கு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதில் அளித்துள்ளார்.



தமிழகத்தில், கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலையின் தாக்கம் குறைந்ததை அடுத்து, கடந்த செப்ரெம்பர் மாதம் பள்ளி, கல்லூரிகள் திறக்கப்பட்டு மாணவர்களுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பள்ளிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் பின்பற்றவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்கள் கொரோனா தடுப்பூசி கட்டாயம் போட்டிருக்கவேண்டும் என, உத்தரவிடப்பட்டு உள்ளது.

வடகிழக்கு பருவமழை காரணமாக பள்ளி, கல்லூரிகளுக்கு தொடர் விடுமுறை விடப்பட்டிருந்த நிலையில், தற்போது கொரோனா வைரஸ் தொற்றின் புதிய அவதாரம் ஒமைக்ரோன் வைரஸ் தொற்று புதிய தலைவலியை ஏற்படுத்தி உள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் பள்ளிகளுக்கு மீண்டும் விடுமுறை விடப்பட உள்ளதாக சமூக வலைதளங்களில் தகவல் பரவியது.

இந்நிலையில், இது தொடர்பாக, தி.மு.கவைச் சேர்ந்த தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஒமைக்ரோன் தொடர்பாக பொது சுகாதாரத்துறையிலிருந்து பள்ளிக் கல்வித்துறைக்கு அதிகாரபூர்வமாக தகவல்கள் வரவில்லை. பொதுவாக பொது முடக்கத் தளர்வை அமுல்படுத்தும்போது மருத்துவ ஆலோசனைக் குழுவை தமிழக முதல்வர் கலந்து ஆலோசித்து முடிவு எடுப்பது வழக்கம்.

அடுத்து வருகிற பொது முடக்கம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் ஒமைக்ரோன் குறித்து விவாதிக்கப்படும். இதில், எடுக்கப்படும் முடிவின் அடிப்படையில் செயல்படுத்தப்படும்-

இவ்வாறு அவர் கூறினார்.

இந்தியாவில், டில்லி, குஜராத், மஹாராஷ்டிரா, கர்நாடகா, கேரளா, ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில், ஒமைக்ரான் தொற்று பரவி உள்ளது குறிப்பிடத்தக்கது.

# அடுத்த முதலமைச்சர் உதயநிதி?

விழுப்புரம்,டிசெ. 08

தி.மு.க. ஆட்சிக்கு வந்ததில் இருந்தே உதயநிதிக்கு என்ன பொறுப்பு கொடுக்கப்போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் மட்டுமின்றி, தி.மு.க. வட்டாரங்களிலும் இருந்தது. திருவல்லிக்கேணியில் வெற்றி பெற்ற பின் அவருக்கு அமைச்சர் பொறுப்பு கொடுக்கப்படும் என்று பலரும் எதிர்பார்த்த நிலையில், அப்படி எதுவும் நடக்கவில்லை.

இந்நிலையில், கடந்த சில தினங்களாக உதயநிதி அமைச்சராக வேண்டும் என்ற முழக்கம் தி.மு.க. வட்டாரங்களில் தொடங்கி இருக்கிறது. உதயநிதியின் பிறந்தநாளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பேசிய தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும், உதயநிதியின் உயிர் நண்பருமான அன்பில் மகேஷ் “உதயநிதி , சேப்பாக்கம்- திருவல்லிக்கேணி தொகுதியில் மட்டும் சொந்தம் கொண்டாடாமல் 234 தொகுதியிலும் சொந்தம் கொண்டாடவேண்டும். அவர் அமைச்சராக பொறுப்புக்கு வரவேண்டும். இது எனது விருப்பம் மட்டுமல்ல. சேப்பாக்கம் தொகுதி மக்களின் விருப்பம். அவரின் சேவை ஒரு தொகுதியோடு சுருங்கி விடக் கூடாது” என்று கூறினார்.

இதனிடையே, விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த தீவனூரில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற சுயம்பு வடிவான பொய்யாமொழி விநாயகர் கோவிலில் நேற்று காலை தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் சுவாமி தரிசனம் செய்தார்.

அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் பரிவட்டம் கட்டி மரியாதை செலுத்தப்பட்டது. தனது தந்தையின் வேண்டுதலை நிறைவேற்றவும், வருங்காலத்தில் உதயநிதி ஸ்டாலின் தமிழக முதல்வராக வேண்டியும் சுவாமிக்கு சிறப்பு பூஜை செய்யப்பட்டதாக கூறினார். பின்னர் அங்குள்ள பக்தர்களுக்கு பிரசாதங்களை அமைச்சர் அன்பில் மகேஷ் வழங்கினார்.

# பாலியல் குற்றங்களை தடுப்பதற்கு விழிப்புணர்வு வாகனம் அறிமுகம்

சென்னை, டிசெ. 08

சிறுவர்கள் மீதான பாலியல் குற்றங்களை தடுக்கும் வகையில், இரண்டு விழிப்புணர்வு பிரசார பொலிஸ் வாகனங்களை, முதல்வர் ஸ்டாலின் ஆரம்பித்து வைத்தார்.



பொலிஸ் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், குழந்தைகள் மீதான குற்ற நடவடிக்கைகள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், 40 இலட்சம் ரூபாய் மதிப்பில், ஒலி, ஒளி கட்டமைப்புடன் கூடிய இரண்டு விழிப்புணர்வு வாகனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களை, தலைமை செயலகத்தில் கொடி அசைத்து, முதல்வர் ஸ்டாலின் ஆரம்பித்து வைத்தார்.இந்த வாகனங்கள் வாயிலாக, சிறுவர்கள் மீதான பாலியல் குற்ற நடவடிக்கைகளை தடுப்பது குறித்து, பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

வாகனத்தின் நான்கு புறங்களிலும் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் வாயிலாக, சுற்றுப் பகுதிகளில் நடக்கும் நிகழ்வுகளை காணவும், பதிவு செய்யவும் முடியும். தேவைப்படின் பாதுகாப்பு பணியிலும், இந்த வாகனங்களை பயன்படுத்தலாம்.

இந்த வாகனங்கள் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, அனைத்து சட்டம், ஒழுங்கு பணிகளுக்கும் அவசர காலங்களில் நடமாடும் கட்டுப்பாட்டு அறையாக செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த விழிப்புணர்வு பிரசாரத்தை, தமிழகம் முழுதும் எடுத்துச் செல்லும் வகையில், ஒரு வாகனம், சட்டம், ஒழுங்கு கூடுதல் டி.ஜி.பி., கட்டுப்பாட்டிலும் மற்றொரு வாகனம் சென்னை பொலிஸ் கமிஷனர் கட்டுப்பாட்டிலும் செயல்படும்.

# ஜனவரியில் கோவிட் 19 புதிய அலை அபாயம்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 08

**பண்டிகைக் காலங்களில் கோவிட்-19 வைரஸ் பரவும் அபாயத்தை கவனத்தில் கொள்ளாவிட்டால், எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் வைரஸ் வேகமாகப் பரவுவதைக் காணமுடியும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்ளும்போதும் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார ஆலோசனைகளை பின்பற்றுவது அவசியமானது என அதன் செயலாளர், மருத்துவர் செனல் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மருத்துவர் செனல் பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பண்டிகைக் காலங்களில் எச்சரிக்கையுடன் செயற்படாவிட்டால் ஜனவரி மாதத்துக்குள் கோரோனா வைரஸ் வேகமாகப் பரவும்.

சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டு காலத்தை அடுத்து, கவனக்குறைவான பொது நடத்தை காரணமாக ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து பொதுமக்கள் அறிந்திருந்தனர்.

பண்டிகைக் காலங்களில் கோரோனா வைரஸை பொது மக்கள் அலட்சியப்படுத்தினால் அது புதிய அலைக்கு வழிவகுக்கும்.

பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை கடைபிடிக்கவேண்டும் மற்றும் தடுப்பூசி போடப்படுவதை உறுதி செய்யவேண்டும்.

ஒமைக்ரோன் வைரஸ் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்கும் முயற்சியில், தடுப்பூசி வழங்கலுக்குத் தேவையான அனைத்து தடுப்பூசி அளவையும் பெறுவதும் பொதுமக்களை வழிநடத்துவதும் அரசின் பொறுப்பாகும்.

நைஜீரியாவில் இருந்து நாடு திரும்பிய உள்ளூர்வாசி ஒருவருக்கு ஒமைக்ரோன் மாறுபாடு தொற்றிக் கொண்டதைப் போலவே, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் மூலம் எந்தவொரு புதிய வகையும் நாட்டுக்குள் நுழைகிறது.

இதேபோன்ற வழிகளில் நாட்டுக்குள் நுழையும் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும்.

நாட்டுக்குள் வருபவருக்கு பரி சோதனையில் தொற்று இருந்தால், வைரஸின் மரபணு வரிசைமுறையை நடத்த போதுமான ஆதாரங்களை சுகாதார அமைச்சு கொண்டிருக்கவேண்டும். நாட்டுக்குள் நுழையும் மாறு பாடுகளைக் கண்டறிவதற்காக, இந்த வசதிகள் அந்த இடத்தில் ஏற்படுத்தப்படவேண்டும்-என்றார். (அ)

# முதுகெலும்புடன் செயற்படுங்கள்!

## சபாநாயகரிடம் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 08

"எதிரணியின் நம்பிக்கையை சபாநாயகர் இழந்துவிட்டார். ஆளுங்கட்சியின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படாது முதுகெலும்புடன் நடுநிலையாக செயற்பட்டு உரிய தீர்வை வழங்குமாறு வலியுறுத்துகின்றோம். அவ்வாறு இல்லாவிட்டால் சபாநாயகர் பதவிக்கு தற்போதைய சபாநாயகர் பொருத்தமற்றவராகவே இருப்பார்."

- என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களுக்கு எதிராக ஆளுங்கட்சி வன்முறையைக் கையில் எடுத்துள்ளது. எமது கட்சி உறுப்பினர் மனுஷ நாணயக்கார அச்சுறுத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளார். உடல் ரீதியாக அவருக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கு அமைச்சர்களும், ஆளுங்கட்சி உறுப்பினர்களும் முற்பட்டுள்ளனர்.

ஆனால் இது தொடர்பில் சபாநாயகர் மௌனம் காக்கின்றார். எமது பாதுகாப்பு தொடர்பில் உத்தரவாதம் வழங்காமல் உள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது சபாநாயகரின்



பொறுப்பு. அந்த பொறுப்பை நிறைவேற்றாதவராகவே தற்போதைய சபாநாயகர் இருக்கின்றார்.

மனுஷ நாணயக்கார மீது தாக்குதல் நடத்துவதற்கு ஆளுங்கட்சியில் இருந்து எதிரணி பக்கம் வந்த அமைச்சர்கள் உட்பட ஆளுங்கட்சியினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுத்து தனது பொறுப்பை சபாநாயகர் நிறைவேற்ற வேண்டும்.

சபாநாயகர் என்பவர் நடுநிலையாக செயல்படவேண்டியவர். தற்போதைய சபாநாயகர் எதிரணியின் நம்பிக்கையை இழந்துவிட்டார். பெரும்பான்மை பலத்தை பயன்படுத்தி எமது குரலை நசுக்க முற்படும் அரச வன்முறையாளர்களுக்கு அஞ்சமாட்டோம். ஜனநாயகத்துக்காக போராடுவோம். எனவே, சபாநாயகரும் முதுகெலும்புடன் செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# காஸ் களஞ்சியத்தை இடமாற்ற கோரி யாழ்ப்பாணத்தில் நேற்று கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 08

நாடு முழுவதும் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்ச்சியாக பதிவாகிவரும் நிலையில் தமது உயிருக்கு பாதுகாப்பு தேடும் வகையில் காஸ் விநியோகஸ்தர் நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றுமாறு வலியுறுத்தி, மக்கள் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம்- கொட்டடிப் பகுதியில் அமைந்துள்ள காஸ் விநியோகஸ்தர் நிலையத்துக்கு முன்பாக இந்த கவனவீர்ப்பு போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பிரதேச வாழ் மக்களுக்கு பாரிய உயிராபத்து மற்றும் சேதங்களை ஏற்படுத்தக்கூடிய எரிவாயுக் களஞ்சியத்தை, பொருத்தமான இடத்துக்கு இடமாற்றுமாறு வலியுறுத்தியே கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது எமது உயிருக்கு யார் உத்தரவாதம்?, தற்போதைய தரமற்ற எரிவாயு விநியோகத்துக்கு யார் பொறுப்பு?, ஏழைகளின் உயிரா? பண பலமா?, எங்கள் பிள்ளைகளின் உயிருடன் விளையாடாதே, ஆரோக்கியமான சந்ததியாக நாம் வாழ வழி விடு போன்ற பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# பிரியந்த குமார கொலைக்கு பேராயர் மல்கம் கண்டனம்

கொழும்பு, டிசெ. 08

பாகிஸ்தானில் பிரியந்த குமார தியவடனே மிலேச்சத்தனமாக கொலை செய்யப்பட்டமைக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். மதத்தின் பெயரை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இவ்வாறான அடிப்படைவாத குற்றங்களால் ஏற்படும் பாதிப்புக்களை இல்லாதொழிப்பதற்கு அனைத்து நாட்டு தலைமைத்துவங்களும் கடுமையாக சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாகிஸ்தானில் அடிப்படைவாதிகளால் பிரியந்த குமார தியவடனே என்ற இலங்கை பிரஜை மிலேச்சத்தனமாக கொலை செய்யப்பட்டமை தொடர்பில் இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த கொடூரமானதும் பயங்கரமானதுமான கொலையை நாம் வன்மையாகக் கண்டிருக்கின்றோம். அத்தோடு இதனால் பெரும் மனக்கவலைக்கு உள்ளாகியுள்ள குடும்பத்தாருக்கும் உறவினருக்கும் எமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மதத்தின் பெயரை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இவ்வாறான



அடிப்படைவாத குற்றங்களால் ஏற்படும் பாதிப்புக்களை இல்லாதொழிப்பதற்கு அனைத்து நாட்டு தலைமைத்துவங்களும் கடுமையாக சட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும்.

மதத்தின் பெயரால் அடிப்படைவாதிகள் அவர்களது தனிப்பட்ட அல்லது அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மனிதர்களை கொலை செய்யுமளவிலான ஆபத்தான நிலைமை உலகில் வேறு எதிலும் இல்லை. இது மதங்களுக்கு ஏற்படுத்தப்படும் அவமதிப்பாகும்.

இவ்வாறான கொலையாளிகள் மற்றும் அவர்களுக்கு உதவி வழங்குபவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, அவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

அத்தோடு இதுபோன்ற பாரதூரமான சம்பவங்கள் இனியொருபோதும் இடம்பெறாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். எனவே இந்த அநீதியான கொலையுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக பாகிஸ்தான் தலைமைத்துவம் விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றுள்ளது. (அ)

# திருமலை கப்பல்துறையில் பஸ் விபத்து; 26 பேர் காயம்!

திருமலை, டிசெ. 08

திருகோணமலை-கண்டி பிரதான வீதியின் கப்பல்துறை பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் 26 பேர் காயமடைந்தனர்.

தொழிற்சாலை பணியாளர்களை ஏற்றிச்சென்ற பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரம் ஒன்றுடன் மோதுண்டதனாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது 26 பேர் காயமடைந்துள்ளனர் எனவும், காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)



# பாடசாலையிலும் எரிவாயு வெடிப்பு

கொழும்பு, டிசெ. 08

தெனியாய, பெவர்லி தமிழ் மகா வித்தியாலயத்தில் எரிவாயு வெடிப்புச் சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

சமையலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடசாலை அறையொன்றில் ஆசிரியர்கள் தேநீர் தயாரிப்பதற்கு முற்பட்ட போதே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# பஸில் ராஜபக்ஷ திடீரென இந்தியா சென்றமை ஏன்?

*சபையில் கேள்வியெழுப்பினார் ரணில்*



கொழும்பு, டிசெ. 08

**நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் திடீர் இந்திய விஜயம் தொடர்பான அனைத்து விவரங்களையும் வெளியிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அடுத்த வருடத்திற்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில், நிதியமைச்சரின் திடீர் இந்திய விஜயம் கவலையளிப்பதாகவும் அவர் கூறினார்.

மேலும் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது எந்தவொரு நிதி அமைச்சரும் நாட்டை விட்டு வெளியேறியதில்லை என்றும் ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதார மீட்சிக்கான அனைத்து நிதி விவரங்கள் மற்றும் திட்டங்களைச் சபையில் முன்வைக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கும் நிதி அமைச்சருக்கும் உள்ளது என ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

ஆனால் நாட்டின் தற்போதைய வெளிநாட்டு கையிருப்பை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்திடம் சில நாட்களுக்கு முன்னர் கோரிக்கை விடுத்திருந்தபோதிலும், அதற்கான ஆவணம் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (அ)



# கிளிநொச்சி வீடொன்றில் பெருமளவு எறிகணைகள்!

கிளிநொச்சி, டிசெ. 08

கிளிநொச்சி - உமையாள்புரம் சோலை நகர் பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து பெருந்தொகையான எறிகணைகள் மற்றும் வெடிபொருட்கள் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, உமையாள்புரம் - சோலை நகர்ப் பகுதியில் எறிகணை ஒன்றை வீட்டுக்குள் வைத்து கிறைண்டரினல் வெட்டிய போது, அது வெடித்து சிதறியது.

அதில் 25 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததுடன் 13 வயதுடைய சிறுவன் ஒருவனும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்

மேலும், சம்பவம் இடம்பெற்ற வீட்டில் ஒரு சில வெடிபொருட்கள் அன்றைய தினம் அடையாளம் காணப்பட்டன.

இந்நிலையில் நேற்று, விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது, குறித்த வீட்டிலிருந்தும் வீட்டு வளவுக்குள் இருந்தும் பெருந்தொகையான வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. (அ)



# பேசாலையில் அனுமதியின்றி அட்டை பிடித்தவர்கள் கைது

மன்னார், டிசெ. 08

மன்னார், பேசாலையில் அனுமதிப்பத்திரம் இன்றி ட்ரோலர் படகில் சென்று அட்டை மடியை பயன்படுத்தி தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பேசாலை கடற்பரப்பில் நேற்றுக் காலை நான்கு மீனவர்கள் கடற்படையால் கைது செய்யப்பட்டு பேசாலை கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதன்போது அந்தப் படகில் இருந்து 205 அட்டையும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

# இலங்கை இராணுவத்தின் புதிய பிரதானி லியனகே



கொழும்பு, டிசெ. 08

பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா ஆகியோரின் பரிந்துரைக்கமைய நேற்று முதல் அமுலுக்கு வரும்வகையில் இலங்கை இராணுவத்தின் 59 ஆவது பிரதானியாக மேஜர் ஜெனரல் எச்.எல்.வி.எம்.லியனகே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கஜபா படைப்பிரிவின் மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே, இந்த புதிய நியமனத்துக்கு முன்னர் இலங்கை இராணுவத்தின் தொண்டர் படையின் கட்டளைத் தளபதியாக கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆங் சாங் சூகிக்கு சிறைத் தண்டனை; இராணுவ ஆட்சிக்கு வாசுதேவ எதிர்ப்பு

கொழும்பு, டிசெ. 08

"மியன்மார் முன்னாள் தலைவி ஆங் சாங் சூகிக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டமை குறித்து கவலை அடைகின்றோம். எந்த நாடாக இருந்தாலும் நாம் இராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பு." - என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று மியன்மார் விவகாரம் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"தவறிழைத்தால்தான் தண்டனை என மியன்மார் இராணுவ ஆட்சி கூறுகின்றது. அது நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு. அது பற்றி ஆராய்ந்து வருகின்றோம்." - என்றும் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

மியன்மார் தொடர்பில் ஆசிய நாடுகள்கூட துரிதமாக செயற்பட்டுள்ளன. எனவே, இலங்கையும் உரிய நிலைப்பாட்டை அறிவிக்கவேண்டும் என இதன்போது ரணில் வலியுறுத்தினார். (அ)

# வவுனியா வடக்கு பிரதேச சபையின் பட்ஜெட் நேற்று மீண்டும் தோல்வி

வவுனியா, டிசெ. 08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமுள்ள வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் 9 மேலதிக வாக்குளால் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் ச.தணிகாசலம் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

கடந்த மாதம் இடம்பெற்ற அமர்வில் சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் முன்வைக்கப்பட்ட நிலையில் அது வாக்கெடுப்புக்கு விடப்பட்டு தோற்கடிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று அது மீளவும் முன்வைக்கப்பட்டது.

இதன்போது மக்கள் சார்பான வேலைத்திட்டத்துக்கு போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லை என பல்வேறு உறுப்பினர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

குறிப்பாக இந்த வரவு-செலவுத்திட்டத்தை தோற்கடிக்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வி.சஞ்சுதன், கருத்து தெரிவித்தார். அவரது கருத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் முகுந்தன் வழிமொழிந்தார்.

அனேக உறுப்பினர்களின் எதிர்ப்பினால் வரவு - செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

அந்தவகையில் பட்ஜெட்டுக்கு எதிராக தமிழர் விடுதலைக் கூட்டணி, பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசிய கட்சி, சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனி, சுயேச்சைக் குழு ஆகியவற்றை சேர்ந்த 17 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

பட்ஜெட்டுக்கு ஆதரவாக தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த 8 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினரும் வாக்களித்திருந்தனர். இதனால் 9 வாக்குகளால் 2021 ஆம் ஆண்டுக்கான சபையின் பட்ஜெட் இரண்டாவது முறையாகவும் தோல்வியடைந்தது.

இந்நிலையில் உள்ளூராட்சி சட்டங்களின்படி பிரதேச சபைக்கு புதிய தவிசாளரை தெரிவு செய்வதற்கான தேர்தல் விரைவில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# அடிமட்ட செல்வாக்கை இழக்கும் ஆளுங்கட்சி

கொழும்பு, டிசெ. 08

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையால் நகர்ப்புறங்களில் மட்டுமன்றி கிராமப்புற மக்களும் கடும் அதிருப்தியடைந்துள்ளதால், அது அரசின் மீதான வெறுப்பாக மாறத் தொடங்கியுள்ளது.

ஏற்கனவே உள்ளூராட்சி மன்றங்கள் பலவற்றில் ஆளுங்கட்சியின் வரவு - செலவுத் திட்டங்கள் தோல்வியடைந்துள்ள நிலையில், ஆளுங்கட்சியின் பிரதான வாக்கு வங்கியாகக் கருதப்படும், முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் கோட்டையான ஹொரணை பிரதேச சபையில் ஆளுங்கட்சி பின்னடைவை சந்தித்துள்ளது.

பொதுஜன பெரமுன ஆளும் ஹொரணை பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நான்கு மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 21 வாக்குகளும் எதிராக 25 வாக்குகளும் கிடைத்தன.

ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் பொதுஜன பெரமுனவின் 7 உறுப்பினர்களும் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்துள்ளனர். (அ)

# நிலையான கொள்கையின்றி தடுமாறும் கோட்டாபய அரசு

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 08

அரசாங்கத்திடம் முறையான கொள்கை இல்லாமையினால் நாட்டின் பொருளாதாரம் தற்போது வீழ்ச்சியை சந்தித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

நாட்டில் டொலர் இருப்பு வீழ்ச்சியை சந்தித்துள்ளதால் அரசாங்கத்துக்கு தரம் குறைவான பொருட்களை இறக்குமதி செய்வதற்கான நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மீள் கட்டியெழுப்பும் நடவடிக்கை தொடர்பில் ரத்கம தேர்தல் தொகுதி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவ்வாறு தரம் குறைவான பொருட்களை இறக்குமதி செய்வதால் எரிவாயு கலன்கள் வெடிப்புக்குள்ளாகுதல், தரம் குறைவான பொருட்களை கொள்வனவு செய்தல் போன்ற துரதிஷ்ட நிலையை சந்திக்க நேர்ந்தள்ளது.

நாடு இன்று சந்தித்துள்ள துரதிஷ்டமான நிலைமையிலிருந்து அரசாங்கத்தை கட்டியெழும்பி மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் உருவாக்கப்படும் அரசாங்கத்தால் மாத்திரமே முடியும்.

நாட்டில் இன்று சகல வீடுகளிலும் மரண பயம் ஏற்பட்டுள்ளது. எந்த சந்தர்ப்பத்தில் எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கும் என்ற பயத்தில் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இது வொரு கவலைக்குரிய நிலைமையாகும்.

நாட்டில் பொருளாதாரம் வீழ்ச்சியை சந்தித்ததும் எரிவாயு சிலிண்டர்கள் மாத்திரம் வெடிப்பதில்லை. ஏனைய சகல துறைகளும் வீழ்ச்சியையே சந்திக்கும். நாட்டின் டொலர் இருப்பு வீழ்ச்சியை சந்தித்ததும் தரம் குறைந்த பொருட்களை கொள்வனவு செய்வது இயல்பான விடயமே.

இன்று எரிவாயு கொள்கலன்கள் தொடர்பிலும் அவ்வாறான நிலையே ஏற்பட்டுள்ளது. நாட்டில் மாத்திரமல்ல ஒவ்வொரு வீட்டிலும் கூட வருமானம் குறைந்ததும் விலைக் குறைந்த பொருட்களை கொள்வனவு செய்யவே மக்கள் முன்வருவார்கள்.

2002ஆம் ஆண்டு நான் அமைச்சரவை அமைச்சராக இருந்தபோது அப்போதிருந்த விலையைவிட குறைந்த விலையில் எரிவாயுவை பெற்றுக் கொடுக்க ஒரு நிறவனம் காலி துறைமுகத்திலிருந்து வருகை தந்தது. அந்த சந்தர்ப்பத்தில் அந்த செயற்பாட்டுக்கு நான் எதிர்ப்பு தெரிவித்தேன். இதனுடன் சம்பந்தப்பட்ட வர்த்தகர் எனது தோழராக இருந்தாலும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே நான் அதற்கு எதிர்ப்பை வெளியிட்டேன்.

ஆனால், தற்போது இலாப நோக்கில் ஒரு சில செயற்பாடுகளில் ஈடுபடுவதால் எரிவாயு கொள்கலன்கள் வெடிப்புக்குள்ளாகின்றன. அதுமாத்திரமின்றி நாட்டின் பொருளாதாரமும் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது.

மறுபுறம் மின்வெட்டும் இடம்பெறுகிறது.இதனால் மக்கள் பெரும் அச்சுறுத்தலை சந்தித்து வருகின்றனர். இந்த மின்வெட்டு பாரதூர பிரச்னையான உருவெடுத்துள்ளது. இந்த மின்வெட்டு எதற்காக இடம்பெறுகின்றது என்பது தொடர்பான காரணங்கள் இதுவரையில் உறுதியாக தெரிவிக்கப்படவில்லை.

இந்த மின்வெட்டு நடவடிக்கைக்கும் அவர்களுக்கும் தொடர்பில்லை என்று மின்சார சபையின் பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.ஆனால், இது நாட்டில் பல்வேறு துறைகளையும் பாதித்து வருகிறது - என்றார். (அ)

# 2 கோடி ரூபா பெறுமதியான கஞ்சாவுடன் இருவர் கைது!

வவுனியா, டிசெ. 08

வவுனியாவில் இரண்டு கோடி ரூபா பெறுமதியான 145 கிலோ கேரள கஞ்சாவைக் கடத்திச்சென்ற இருவரை கைது செய்துள்ளனர் என ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலுக்கமைய யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த கூலர் ரக வாகனத்தை நேற்று வவுனியா ஓமந்தையில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் வழிமறித்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அதில் சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது அந்த வாகனத்தில் பொதி செய்து மறைத்து வைக்கப்பட்டிருந்த 145 கிலோ கேரள கஞ்சாவை மீட்டதுடன், வாகனத்தையும், அதில் பயணித்த சாரதி உட்பட இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

மீட்கபட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் இரண்டு கோடி ரூபா இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பிரியந்த குமாரவை தாக்கிய முக்கிய சந்தேக நபர் கைது!

இஸ்லாமாபாத், டிசெ. 08

பாகிஸ்தானில் தொழிற்சாலையில் இலங்கை முகாமையாளர் பிரியந்த குமார படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபரான இம்தியாஸ் அலியா பில்லி என்பவர் ராவல்பிண்டி செல்லும் பஸில் வைத்து பாகிஸ்தான் பஞ்சாப் பொலிஸாறால் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார். இதனை பஞ்சாப் பொலிஸார் தமது அதிகாரபூர்வ ருவிட்டர் பக்கத்தில் அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டதன் மூலம் இலங்கை முகாமையாளரை படுகொலை செய்ய சதித்திட்டம் தீட்டியவர் உட்பட வழக்கில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர்களின் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்துள்ளது.




பஞ்சாப் முதல்வர் உஸ்மான் பஸ்தார் மற்றும் பஞ்சாப் ஐஜி ஆகியோர் வழக்கு விசாரணையை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். இந்த வழக்கை விசாரிக்கும் பணியை, அரசுத் தரப்பு செயலரிடம் முதல்வர் ஒப்படைத்துள்ளார் என்று பொலிஸ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தத் தாக்குதலைத் தூண்டியவர்களில் ஒருவரான அத்னான் இப்திகாரையும் பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர். (அ)

# அடையாள இலக்கத்துடன் இனிமேல் பிறப்பு சான்றிதழ்

கொழும்பு, டிசெ. 08

பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் இலங்கை அடையாள இலக்கத்துடன் கூடிய பிறப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, எதிர்காலத்தில் புதிய பிறப்புச் சான்றிதழ் வழங்கும்போது இந்த அடையாள இலக்கம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அடையாள இலக்கத்தை, தேசிய அடையாள அட்டையை தயாரிக்க பயன்படுத்துவதற்கும் பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்து செயல்பாடுகளின்போது உபயோகிப்பதற்கும் பொது மற்றும் தனியார்துறை சேவைகளை அணுகுவதற்கும் பயன்படுத்தமுடியும் என்று கூறப்பட்டது. (அ)

# வவுனியாவில் ஒரே இரவில் ஐந்து கடைகளில் திருட்டு!

வவுனியா, டிசெ. 08

வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள 5 விற்பனை நிலையங்களில் ஒரே இரவில் திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

வவுனியா மில் வீதி, சூசைப் பிள்ளையார்குளம் வீதி, கந்தசாமி கோவில் வீதி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள விற்பனை நிலையங்களுக்கு சென்ற திருடர்கள் அவற்றின் கூரைத்தகடு மற்றும் வாயிலை உடைத்து உள்நுழைந்துள்ளதுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த பணத்தை திருடிச்சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு குறித்த கடைகளை அதன் உரிமையாளர்கள் மூடிச்சென்றிருந்த நிலையில் நேற்றுக் காலை மீண்டும் திறப்பதற்காக வந்தபோது கடைகள் உடைக்கப்பட்டிருப்பதை உரிமையாளர்கள் அவதானித்தனர். சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

நேற்று அதிகாலை வேளையில் குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் சந்தேகிக்கப்படுவதுடன் குறித்த கடைகளில் இருந்து பல இலட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக சி.சி.ரி.வி கமெராக்களின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# எரிவாயு சிலிண்டர் வெடிப்பு குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை

கொழும்பு, டிசெ. 08

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி வரை நாடு முழுவதும் 458 எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

எரிவாயு சிலிண்டர் தீப்பற்றுகின்றமை மற்றும் அதனுடன் தொடர்புடைய வெடிப்பு குறித்து விசாரணை நடத்தி தீர்வை பெற்றுக் கொடுக்கும் ஜனாதிபதி ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இதன்படி, இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நவம்பர் மாதம் 28ஆம் திகதி வரையான நாடு முழுவதும் 28 வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

எனினும், கடந்த 29ஆம் திகதி முதல் டிசெம்பர் 5ஆம் திகதி வரையான ஒரு வார காலத்தில் மாத்திரம் 430 வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த ஒரு வார காலப் பகுதியில் கடந்த 3ஆம் திகதியே அதிகளவான வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக வும், அன்றைய தினத்தில் மாத்திரம் 142 வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெடிப்புக்கள் தொடர்பான சாராம்சம்:

எரிவாயு சிலிண்டருக்கு சேதம் ஏற்பட்ட சம்பவம் - 01

எரிவாயு குழாய்க்கு சேதம் ஏற்பட்ட சம்பவங்கள் - 23

ரெகியூலேட்டருக்கு சேதம் ஏற்பட்ட சம்பவங்கள் - 09

எரிவாயு அடுப்புகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் - 178

வேறு உபகரணங்களுக்கான சேதங்கள் - 03


எரிவாயு கசிவு - 244

இனிவரும் காலத்தில் எரிவாயு நிறுவனங்களினால் உரிய அளவிலான இரசாயனம் உள்ளடக்கப்படும் என அந்த குழு கூறியுள்ளது.

எதிர்வரும் காலத்தில் எரிவாயு கசிவு ஏற்படும் பட்சத்தில், அது குறித்து பொதுமக்கள் இலகுவாக அறிந்துக்கொள்ள முடியும் என அந்த குழு குறிப்பிட்டுள்ளது. (அ)

# கல்வியின் இராணுவமயமாக்கலும் ‘நெறிப்படுத்தலின்’ வியாபாரமும்

■ அனுஷ்கா கஹந்தகமகே



தற்சமயம் ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் தேர்தல் பிரசாரங்களின் பிரதான அரசியல் உந்து சக்தியாக இருந்தது சமுதாயத்தை ”நெறிப்படுத்துவது” ஆகும். மக்கள் பெரும்பான்மை தற்போதைய அரசாங்கத்திற்கு வாக்களித்தமைக்குப் பின்னால் நெறிப்படுத்தப்பட்ட சமுதாயமொன்றை உருவாக்குவதற்கான எதிர்பார்ப்பு காணப்பட்டது. அதற்கிணங்க சமுதாயத்தைப் பாதுகாக்கவும் நெறிப்படுத்தவும், போரை வென்ற பரிபாலனத்தின் ஒரு முக்கிய பங்காளரும் முன்னைய இராணுவ அதிகாரியுமாகிய ஒருவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். ஆகவே இராணுவ மயத்துடன் கூடிய தேர்தல் வெற்றி, பெரும்பான்மை மக்கள் விருப்பத்தோடு நடந்ததொன்றேயொழிய ஒரு எதேர்ச்சியான விபத்தல்ல. இதனைத் தொடர்ந்து வந்த சமூகம் மற்றும் நிறுவனங்களின் இராணுவ மயமாக்கலும் மக்கள் அறியாமல் நடந்தவையல்ல.

போர் முடிவடைந்த காலம் முதலே கல்வித்துறையில் இராணுவமயமாக்கலானது ஊடுருவ ஆரம்பித்து விட்டது. பள்ளிக்கூட அதிபர்கள் உட்படக் கல்வி அதிகாரிகள் ஊதியமற்ற படைத்துறை உயர்பணியாளர்களாக (ப்ரெவட் கர்னல்) நியமிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இராணுவத்தின் தலைமையிலான பயிற்சித் திட்டங்களை அரசாங்கம் ஆரம்பித்தது. தற்போது போர் முடிந்து 12 ஆண்டுகள் கடந்த பின்னர் மீண்டும் தலை தூக்கியுள்ள போரை வென்ற பரிபாலனமானது இராணுவ மயமாக்கலைப் பேணுவதற்கான புதிய வழிமுறைகள் மூலம் இராணுவத்தின் ஆதிக்கத்தை விரைவாக விரிவுபடுத்துகின்றது. இவர்களின் ஆரம்ப உபாயங்களிலொன்று பொதுத்துறையை நெறிப்படுத்தும் பெயரில் பொதுமக்கள் நிறுவனங்களில் இராணுவ அதிகாரிகளை நியமித்தலாகும். அண்மையில் முன்வைக்கப்பட்ட கொத்தலாவல சட்டமானது கல்வித் துறை மூலம் இராணுமயமாக்கலை முன்னெடுப்பதற்கான முயற்சியைப் பிரதிபலிக்கின்றது.

> **கல்வியை இராணுவமயமாக்குவதன் பின்விளைவுகள்பல. இதனால்ஏனைய அறிவுசார் அமைப்புக்களின் பெறுமதி குறைத்து மதிப்பிடப்படுவதோடு, தர்க்க ரீதியான சிந்தனையை வளர்க்காது அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் போக்கே மாணவர் மத்தியில் வளர்க்கப்படும்.**

**நெறிப்படுத்தலும் பண்டமாக்கலும்**

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகமானது 1981 இன் 68ஆம் பாராளுமன்ற சட்டத்தின் கீழ் 1981 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. அண்மையில் முன்வைக்கப்பட்ட சட்டத்தின் படி பாதுகாப்பு அமைச்சரால் கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் நிர்வாகக்குழு அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவர். இதன் ஒன்பது அங்கத்தவர்களில் பாதுகாப்பு அமைச்சின் பொருளாளர் மற்றும் துணைப் பொருளாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் திறைசேரியிலிருந்து பரிந்துரைக்கப்பட்டவர்கள் (இரண்டிலுமிருந்து ஒவ்வொருவர்), பாதுகாப்பு ஊழியர்களின் தலைவர், முப்படைகளினதும் படைத் தலைவர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் ஆகியோர் உள்ளடக்கப்படுவர்.

இங்கு துணைவேந்தரும் ஒரு இராணுவத் தளபதியாவார். முன்வைக்கப்பட்ட இந்த சட்டத்தின் படி கொத்தலாவல பல்கலைக்கழகமானது இராணுவப் பயிற்சி மட்டுமன்றி வேறு எந்தத் துறையிலும் உயர் கல்வியை சட்டபூர்வமாக வழங்க முடியும். அதாவது இப் பல்கலைக்கழகமானது நாட்டின் அரச பல்கலைக்கழகங்களைப் போன்று இயங்குவதுடன், மாறாக இராணுவத்தால் நிர்வகிக்கப்படுவதோடு முற்றாகக் கட்டணம் அறவிடும் ஒரு நிறுவனமாகவும் காணப்படும்.

இந்த சட்டமானது பெரும்பான்மை மக்களின் “இராணுவமயப்படுத்தப்பட்ட மற்றும் நெறிப்படுத்தப்பட்ட சமூகம்” என்ற எண்ணத்தை மேலும் வலுப்படுத்துகின்றது. இங்கு மக்கள் கோரும் “நெறியானது” ஒரு அதிகாரம் மிக்க அரச நிறுவனத்தினால் உயர் கல்வி வாயிலாகச் சந்தைப்படுத்தப்படுகின்றது. கவர்ச்சிகரமான ஒரு வியாபாரத்தைத் தாபிக்க வாக்காளர்கள் மத்தியில் பிரபலமான கல்வி மற்றும் நெறிப்படுத்தல் ஆகியன இங்கு வெகு சாமர்த்தியமாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இதன் வாடிக்கையாளர்களில் ஒரு பகுதியினர் இலவசக் கல்வி முறைக்காக வரி செலுத்தும் மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே தேசியக் கொள்கைக்கேற்ப ”நெறிப்படுத்தலைத்” தொடர்ந்து கல்வியும் பண்டமாக்கப்படும் நிலை உருவாகலாம்.

நிதி அமைச்சின் அறிக்கையொன்றில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. அண்மையில் இலங்கை வங்கி (BOC) மற்றும் தேசிய சேமிப்பு வங்கி (NSB) ஆகியவை திறைசேரி உத்தரவாதம் ஒன்றின் கீழ் 36.54 பில்லியன் ரூபாக்களை கொத்தலாவல பல்கலைகழகத்திற்கு வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டன. மக்களின் வரிப் பணத்தில் பாரிய தொகையொன்று இவ்வாறு கொத்தலாவல பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படும் போது இயல்பாகவே அரச பல்கலைக்கழகங்களுக்காக ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்பட்டுவிடும். கல்வியைத் தனியார்மயமாக்குவதன் சுமை உண்மையில் மாணவர்களையே சென்றடையும். அரசிடமிருந்து நிதி ரீதியான ஆதரவு குறைவடைந்து பல்கலைக்கழகங்கள் பலவீனப்படுகையில், தேசத்தின் இலவசக் கல்விக்காக ஏற்கனவே செலவிட்டிருக்கும் மாணவன் கட்டணம் அறவிடும் கற்கை நெறிகளைத் தேடும் நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்படுகின்றான். மறுபுறம் கட்டணம் செலுத்த முடியாத மாணவர்கள் வளங்கள் குறைந்த அரச பல்கலைக்கழகங்களில் தங்கியிருக்க நேரிடும். இது சமூக வர்க்கங்களுக்கிடையிலான பிரிவினையை மேலும் விரிவுபடுத்தும். இப் புதிய கல்வி முறையானது, இலவசக் கல்வியின் (முன்னைய) நோக்கிற்கு முற்றிலும் மாறுபட்டதாகும்.

**ஜனநாயகத்துகாக இலவசக் கல்வி**

ஜனநாயகமான தேசத்தைப் போலவே கல்வியும் மக்களின் உரிமையாகும். ஜனநாயகத்துக்கான அடிப்படையை உருவாக்குவது சுதந்திரமான கல்வியாகும். அத்தோடு அக் கல்வியைச் சகலரும் பெறக்கூடிய தன்மை காணப்பட வேண்டும். தலைவர்களை மக்கள் தேர்ந்தெடுப்பதற்கு அவர்கள் கல்வியும் அறிவும் கொண்டவர்களாகக் காணப்பட வேண்டும். அநீதிக்கெதிராகப் போராடவும், தமது உரிமைகளைப் பாதுகாக்கவும், அரசாங்கங்களின் சர்வாதிகாரத்தைத் தடுக்கவும் கல்வியானது மக்களைத் தயார் செய்யும் வகையில் அமைந்திருக்க வேண்டும். ஆகவே கல்வியானது அரசியல் மற்றும் பொருளாதார சக்திகளின் ஆதிக்கத்திற்குட்படாது தன்னிச்சையாக இயங்க வேண்டும். கல்வியைப் பெறும் தகவானது செல்வந்தர்கள், பெரும்பான்மையினர், அல்லது அதிகாரம் மிக்கவர்களின் பால் பக்கச்சார்பாக இருக்கும்போது உருவாகும் நடுநிலையற்ற ஜனநாயகமானது முடக்கப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தத் தவறுகின்றது.

நாட்டின் இலவசக் கல்வி முறைக்கு அடித்தளமிட்ட 1943 இன் கன்னங்கர அறிக்கையானது கல்வியின் “தன்னாட்சி” பற்றி விவரித்துள்ளது. இங்கு கல்வியைத் தன்னாட்சியான ஒரு அமைப்பு மூலம் நிர்வகிப்பதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளதோடு முதலாம் நிலை முதல் மூன்றாம் நிலை வரை கல்வியானது இலவசமாக அமைய வேண்டும் என்றும் முன்மொழியப்பட்டது. இங்கு தவறான நபர்களிடம் கல்வி ஒப்படைக்கப்படுவதன் ஆபத்துக்களும், ஜனநாயகத்துக்கும் இலவசக்கல்விக்கும் இடையிலுள்ள தொடர்பும் கருத்தில் கொள்ளப்பட்டமை தெளிவாகின்றது. இதனாலேயே கல்வியானது மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும் இன்றோ எமது அரசாங்கமானது கல்வியை மக்களுக்கு விற்பனை செய்ய முயன்றுள்ளதுடன் அதனை இரணுவத்திடம் ஒப்படைக்கவும் எத்தனித்துள்ளது.

**எமது எதிர்காலம்**

போர் முடிவடைந்த இக்காலப் பகுதியில் கல்வியானது நல்லிணக்கத்தை வலியுறுத்த வேண்டும். கூறப்படாத வரலாற்றுக் கதைகளை மீண்டும் எழுதுவதற்கு மாணவர்கள் தூண்டப்பட வேண்டும். இங்கு சமாதானம் மற்றும் ஒற்றுமையை வளர்க்க சமூகங்களை ஒன்றுபடுத்துவதை விடுத்து, கல்வியானது மக்களை அடக்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த இராணுவமயமாக்கல் திட்டமானது முறையான கல்வியின் அனைத்து வடிவங்களையும் இராணுவ அமைப்பொன்றின் கீழ் தாபிக்க எத்தனிக்கின்றது. குடியேற்றவாதிகள் குடியேற்றத்தினை நியாயப்படுத்த நாகரிகமான ஒரு சமுதாயத்தின் உருவாக்கத்தைக் காரணம் காட்டியது போன்று, எமது அரசாங்கமும் இராணுவமயமாக்கலை நியாயப்படுத்த “நெறிப்படுத்தப்பட்ட” ஒரு சமுதாயத்தின் உருவாக்கத்தினைச் சுட்டுகின்றது.

கல்வியை இராணுவமயமாக்குவதன் பின்விளைவுகள் பல. இதனால் ஏனைய அறிவுசார் அமைப்புக்களின் பெறுமதி குறைத்து மதிப்பிடப்படுவதோடு, தர்க்க ரீதியான சிந்தனையை வளர்க்காது அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் போக்கே மாணவர் மத்தியில் வளர்க்கப்படும். சமுதாயத்தில் அநீதிகள் எதிர்க்கேள்வி கேட்கப்படாது விடப்படுவதுடன், மனித உரிமை மீறல்களும் நிறைந்து காணப்படும். கல்வியின் இராணுவமயமாக்கலைப் பொறுத்த வரையில் இது ஒரு முக்கிய பிரச்சினையாக இருப்பதன் காரணம் இக்கல்வி முறையானது இராணுவ அமைப்புகளுக்குக் கீழ்ப்படியும் மேலாதிக்கக் கொள்கையை உருவாக்குவதாகும்.

பொது அறிவுச் சிந்தனையானது இராணுவ விழுமியங்களால் வடிவமைக்கப்பட்டிருக்கும். கொத்தலாவல சட்டம் அதிகாரபூர்வமாக்கப்படுவது கல்வியின் வியாபாரம் மற்றும் இராணுவமயமாக்கலை நோக்கிய ஒரு முக்கிய நகர்வாக அமைந்துவிடும். கொத்தலாவல சட்டத்தை ஏற்றுக் கொள்வது பொதுமக்கள் என்ற வகையில் எம்மை அழிப்பதற்கான கருவிகளை நாமே விலை கொடுத்து வாங்குவதற்குச் சமானமாகிவிடும்.

எழுத்தாளர் ஒடாகோ பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானங்கள் கல்லூரியின் கலாநிதிப் பட்டப்படிப்பு மாணவியாவார்

மொழிபெயர்ப்பு: **கோபிகா சிவகுமார்**

# கொரோனாவை விடவும் அடுத்த பெருந்தொற்று கொடியதாக இருக்கலாம்

**“ஒரு வைரஸ் நம் உயிரையும் வாழ்வாதாரத்தையும் அச்சுறுத்துவது இது கடைசியாக இருக்காது. உண்மை என்னவென்றால், அடுத்து வருவது இன்னும் மோசமானதாக இருக்கக்கூடும். அது அதிகம் பரவக்கூடியதாகவோ அல்லது கொடியதாகவோ அல்லது இரண்டு மாகவோ இருக்கக்கூடும்.**




தற்போது ஏற்பட்டுள்ள கோவிட் நெருக்கடியைவிட வருங்காலத்தில் ஏற்படும் பெருந்தொற்றுகள் மிகக் கொடியதாக இருக்கலாம் என, ஆக்ஸ்ஃபோர்ட் - ஆஸ்ட்ராசெனகா தடுப்பூசியை உருவாக்கியவர்களில் ஒருவரான பேராசிரியர் டேம் சாரா கில்பெர்ட் எச்சரித்துள்ளார்.

44ஆவது ரிச்சர்ட் டிம்பிள்பி உரையில் பேசிய அவர், பெருந்தொற்றால் ஏற்படும் இழப்புகளைத் தடுக்க, அதிக நிதி தேவைப்படும் என தெரிவித்தார்.

கல்வி, கலை, தொழில் மற்றும் அரச குடும்பத்தைச் சேர்ந்த செல்வாக்கு மிக்க பேச்சாளர்கள் வழங்கும் இந்த உரை, மறைந்த ஊடகவியலாளர் மற்றும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ரிச்சர்ட் டிம்பிள்பி பெயரில் வழங்கப்படுகிறது.

இதில் பேசிய டேம் சாரா, ஒமைக்ரோ கொரோனா திரிபுக்கு எதிராக தடுப்பூசிகள் குறைந்த செயல்திறன் கொண்டதாகவே இருக்கும் என எச்சரித்துள்ளார்.

ஒமிக்ரான் குறித்து அதிக தகவல்கள் வெளியாகும் வரை, மக்கள் கவனத்துடன் இருக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், “ஒரு வைரஸ் நம் உயிரையும் வாழ்வாதாரத்தையும் அச்சுறுத்துவது இது கடைசியாக இருக்காது. உண்மை என்னவென்றால், அடுத்து வருவது இன்னும் மோசமானதாக இருக்கக் கூடும். அது அதிகம் பரவக்கூடியதாகவோ அல்லது கொடியதாகவோ அல்லது இரண்டுமாகவோ இருக்கக்கூடும்.

“நாம் அனைத்தையும் கடந்துவிட்ட நிலையை அனுமதிக்க முடியாது. மேலும், நாம் அடைந்திருக்கும் பொருளாதார இழப்புகள், தொற்றைத் தடுப்பதற்கான நிதி இல்லை என்பதை உணர்த்துகிறது” என தெரிவித்தார்.

“நாம் செய்த முன் தயாரிப்புகள், பெற்ற அறிவு ஆகியவற்றை நாம் இழக்கக்கூடாது.”

ஒமைக்ரோன் திரிபு குறித்துப் பேசிய அவர், அதன் ஸ்பைக் புரதத்தில் வைரஸ் பரவலை அதிகரிக்க அறியப்பட்ட பிறழ்வுகள் இருப்பதாக கூறினார்.

“ஆனால், தடுப்பூசிகளால் தூண்டப்படும் ஆன்டிபாடிகள், ஒமிக்ரோன் தொற்று ஏற்படுவதைத் தடுப்பதில் குறைவான செயல்திறன் கொண்டதாக இருக்கும் வகையிலான கூடுதல் மாற்றங்கள் உள்ளன.

“இதுகுறித்து மேலும் அறிந்துகொள்ளும் வரை நாம் கவனமாக இருக்க வேண்டும். இந்த புதிய ஒமிக்ரான் திரிபு பரவுவதை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.”

இருப்பினும், தொற்று மற்றும் லேசான நோய்க்கு எதிரான பாதுகாப்பைக் குறைக்கும் அதேசமயத்தில், கடுமையான நோய் மற்றும் இறப்புக்கு எதிரான பாதுகாப்பைக் குறைக்க வேண்டிய அவசியமில்லை என்று டேம் சாரா கூறினார்.

தொற்றுநோய்களின் போது தடுப்பூசிகள் மற்றும் மருந்துகளை வழங்குவதில் காணப்படும் விரைவான முன்னேற்றம், விதிமுறையாக மாற வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.



## தடுப்பூசி விஞ்ஞானியின் எச்சரிக்கை



தொற்றுக்கு எதிரான அச்சுறுத்தலைத் துடைக்க, உலகளாவிய தடுப்பூசி உருவாக்கப்பட முடியாததற்கு எந்த காரணமும் இல்லை, என்று அவர் கூறினார்.

ஒமைக்ரோன் பரவலை கட்டுப்படுத்த பிரிட்டனுக்கு வரும் பயணிகள் பயணத்துக்கு முன்னதாகவே கொரோனா பரிசோதனை மேற்கொண்டிருக்க வேண்டும் என, பிரிட்டன் அரசாங்கம் கடந்த சனிக்கிழமை உத்தரவிட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிமுதல், பிரிட்டனுக்கு வரும் 12 வயது மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதுடைய பயணிகள் கொரோனா பி. சி. ஆர். பரிசோதனையில் நெகட்டிவ் என்றோ அல்லது பயணத்திற்கு 48 மணிநேரத்துக்கு முன்னதாக லேட்ரல் ஃப்ளோ பரிசோதனை செய்ததற்கான சான்று வைத்திருக்க வேண்டும் என பிரிட்டன் அரசு உத்தர விட்டுள்ளது.

ஒமிக்ரோன் கொரோனா திரிபு அதிகமாக பரவி வருவதால், பயணம் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நாடுகளில் நைஜீரியாவும் சேர்க்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் ஒமிக்ரோன் திரிபால் ஏற்பட சாத்தியம் உள்ள புதிய தொற்று அலையை நிறுத்த விதிக்கப்படும் பயணக் கட்டுப்பாடுகள் மிக தாமதமானவை என, அரசுக்கு ஆலோசனை கூறும் விஞ்ஞானி பேராசிரியர் மார்க் உல்ஃப் தெரிவித்துள்ளார்.

இந்த பயணக் கட்டுப்படுகள், மாற்றத்தை ஏற்படுத்தாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பி. பி. சியின் ஆண்ட்ரூ மார்ஷோ-விடம் பேசிய அவர், பிரிட்டனில் ஒமிக்ரோன் மிக வேகமாக பரவுகிறது எனவும், இதே நிலை பிரிட்டன் மற்றும் தென்னாப்பிரிக்காவில் தொடர்ந்தால், வரும் வாரங்களில் உலகளவில் டெல்டா வைரஸின் இடத்தில் ஒமைக்ரோன் திரிபு இருக்கும் என தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் ஞாயிற்றுக்கிழமை 86 பேருக்கு ஒமைக்ரோன் திரிபு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், ஒமைக்ரோன் திரிபால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 246 ஆக உயர்ந்துள்ளது. மொத்தமாக, இதுவரை கடந்த 28 நாட்களில் 43,992 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். 54 பேர் உயிரிழந்துள்ளனர்.

டேம் சாரா - சீனாவில் கொரோனா பரவல் ஆரம்பமான நிலையில், 2020இன் தொடக்கத்திலேயே கொரோனா தொற்றுக்கு எதிரான தடுப்பூசியை உருவாக்க தொடங்கியதற்காக, இங்கிலாந்து ராணியின் பிறந்த தினத்தை முன்னிட்டு வழங்கப்படும் கௌரவப்பட்டத்தைப் பெற்றதன் மூலம் புகழ்பெற்றவர்.

உலகளவில் அதிகமாக பயன்படுத்தப்படும் தடுப்பூசியாக ஆக்ஸ்ஃபோர்டு - ஆஸ்ட்ராசெனகா தடுப்பூசி திகழ்கிறது. இந்த தடுப்பூசிகள் 170இற்கும் அதிகமான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கோவிட்-19 தடுப்பூசியைக் கட்டாயமாக்குவதற்கு ஆதரவான வாதம் மிகவும் எளிமையானது. தடுப்பூசி செலுத்திக்கொள்வதன் மூலம், நோயின் தீவிரத்தைக் குறைக்கலாம். நோயின் தீவிரம் குறைந்தால், நோய்த் தாக்குதலால் ஏற்படும் மரணங்களும் குறைகின்றன. மேலும், மருத்துவமனைகளிலும் நெருக்கடி குறையும்.

வரலாற்று ரீதியாக, நோய்த்தடுப்பு பிரசாரங்கள் பெரியளவு வெற்றியைக் கண்டுள்ளன. பெரியம்மை போன்ற நோய்களின் பரவலைக் கட்டுப்படுத்தியதோடு, மற்ற நோய்களிலும் உயிரிழப்பு விகிதத்தைக் குறைத்துள்ளன.

“தேவைகள், அதிக தடுப்பூசி விகிதங்களைப் பெறுதல் மற்றும் தனிநபர்களைப் பாதுகாப்பது மட்டுமின்றி சமூகங்களைப் பாதுகாப்பது ஆகியவற்றுக்கு இடையிலான நேரடி உறவைக் காட்டக்கூடிய நல்ல உதாரணங்கள் எங்களிடம் உள்ளன,” என்கிறார் யேல் பல்கலைக்கழகத்தின் மருத்துவ வரலாறு துறையைச் சேர்ந்த பேராசிரியர் ஜேசன் ஸ்வார்ட்ஸ்.

“தடுப்பூசிகள் முற்றிலுமாக வேலை செய்கின்றன அதைக் காட்ட எங்களிடம் நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன.” என்கிறார் ஜேசன்.

லண்டனில், ஜூலை மாதம் ஊரடங்கு எதிர்ப்பாளர்கள் தெருக்களில் இறங்கி சில மணிநேரங்களுக்கு ஆர்ப்பாட்டம் செய்தனர். அரசு எதைச் செய்தாலும் எதிர்ப்பைச் சந்திக்க நேரிடும் என்பதே இதன் கருத்து. குறிப்பாக, கோவிட் கட்டுப்பாடுகள் உலகம் முழுவதும் எதிர்ப்புகளை ஈர்த்துள்ளன. அதோடு கட்டாய முகக்கவசம் என்பதைவிட ஒரு படி மேலே கட்டாய தடுப்பூசி விதிமுறை இருக்கிறது.

“தடுப்பூசியைப் பொறுத்தவரை, மக்கள் மிகவும் வினோதமாகச் சிந்திக்கிறார்கள்,” என்கிறார் லண்டன் பல்கலைக்கழக கல்லூரியிலுள்ள குளோபல் ஹெல்த் நிறுவனத்தின் பொது சுகாதார மருத்துவர் வகீஷ் ஜெயின்.


“தம்முடைய உடலில் செலுத்தப்படும் எதையும், மக்கள் ஒரே மாதிரியாகச் எடுத்து கொள்வது கிடையாது. கல்வியாளர்களும் மற்றவர்களும் கோட்பாட்டளவில் இதை ஒரு கட்டுப்பாடு என்று நினைத்தாலும், மக்கள் இதை உணர்ச்சிகரமாக எதிர்கொள்கிறார்கள்.” என்கிறார்.

**பி.பி.சி.**

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

22) 

1) இவ்வுருவில் $\frac{2}{4}$ பகுதியை பென்சிலால் நிறம் தீட்டுக.

2) நிறம் தீட்டிய பின்னர் எஞ்சிய பகுதியை முழுவதின் பின்னமாக எழுதுக?

23) ஒரு கூடையில் 150 ரம்புட்டான் பழங்கள் வீதம் 3 கூடைகளில் ரம்புட்டான் பழங்கள் உள்ளன. 3 கூடைகளிலும் உள்ள மொத்த ரம்புட்டான் பழங்கள் எத்தனை?

…………………………..

24)

| விலைப்பட்டியல் | | |
|---|---|---|
| பொருள் | விலை | |
| | ரூபாய் | சதம் |
| பயிற்சிக்கொப்பி | 35 | . 00 |
| பென்சில் | 6 | . 50 |
| பேனை | 12 | . 50 |
| அழிறப்பர் | 15 | . 25 |

1) ஒரு பென்சிலும் ஒரு பேனையும் வாங்கினால் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

ரூபாய் ……………………

2) இரண்டு பொருட்கள் வாங்கிய பின் ரூபாய் 50.25 செலுத்தப்பட்டது எனின் வாங்கிய இரண்டும் பொருட்களும் எவை?

………………………… , ………………………….

25) ஒரு பாத்திரத்தில் $5l\ 750ml$ நீர் உள்ளது. அப்பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்காக மேலும் $4l\ 750ml$ நீர் இட வேண்டியுள்ளது. அப் பாத்திரம் கொள்ளும் நீரின் மொத்த அளவு யாது?

……………*l*…………*ml*

26) 2kg 100g நிறையுள்ள ஒரு வத்தகைப்பழமும் 1kg 850g நிறையுள்ள மற்றொரு வத்தகைப்பழமும் உள்ளன. இந்த இரண்டு வத்தகைப்பழங்களின் நிறைகளுக்கு இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

……………………………g

27) 

1) இத் தள வடிவங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய திண்மவுரு எது?


…………………………

2) அதன் விளிம்புகள் எத்தனை? …………………………

28) சமமான அளவுள்ள 3 மேசைகளில் விரிப்பதற்காக 6m 75cm மேசைத்துணி கொண்டுவரப்பட்டது. ஒரு மேசைக்குத் தேவையான துணியின் நீளம் யாது?

…………m ……….cm

29) 4 நாட்களில் விற்பனையாகிய சிறுவர் பத்திரிகை தொடர்பான விபரம் வரைபில் காட்டப்பட்டுள்ளது.





1) அதிகமான சிறுவர் பத்திரிகைகள் விற்கப்பட்ட நாள் எது? …………………

2) 4 நாட்களிலும் விற்கப்பட்ட சிறுவர் பத்திரிகைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

……………………

❖ **30 தொடக்கம் 59 வரையான வினாக்களிற்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

30) 

பின்வரும் செயற்பாடானது சூரிய நமஸ்காரச் செயற்பாட்டில் எப்படிமுறையில் அடங்கும்?

1) 5ம் 2) 4ஆம் 3) 8ஆம்

31) உடைந்த கண்ணாடிக் கழிவுகளை இடவேண்டிய குப்பைத் தொட்டியின் நிறம் யாது?
1) சிவப்பு 2) நீலம் 3) செம்மஞ்சள்

32) இலங்கையின் தேசிய மலர் எது?
1) நாகமலர் 2) நீலோற்பலம் 3) தாமரை

33) விவசாயிகள் அரிவிவெட்டப் பயன்படுத்துவது எது?
1) அரிவாள் 2) கத்தி 3) மண்வெட்டி

34) மென்மையான தண்டினைக் கொண்ட தாவரமாகக் கருதக்கூடியது.
1) கத்தரி 2) முங்கில் 3) வெற்றிலை

35) வெண்டிக்காயின் நெற்றுக்களை நீரிலிட்டால் யாது நிகழும்?
1) மிதக்கும் 2) அமிழும் 3) நீரில் கரையும்

36) பாதுகாப்பிற்காகத் தோலின் நிறத்தை மாற்றக் கூடிய பிராணி எது?
1) பல்லி 2) ஓணான் 3) ஆமடில்லா

37) 


இவ்வலங்காரம் எவ்வாறு அழைக்கப்படும்.

1) மொசைக் 2) ஒரிகாமி 3) கொடி அலங்காரம்

38) கொப்பளிப்பான் நோயைப் பரப்பும் நோய்க்காவி.
1) இலையான் 2) நுளம்பு 3) ஆட்கள்

39) வாகை, விளா என்பன பூக்கும் மாதம் எது?
1) ஆவணி 2) ஆனி 3) பங்குனி

## விடைகள்

22) 1)  2) $\frac{4}{8}$

23) 450

24) 1) 19 : 00
2) பயிற்சிக் கொப்பி, அழிறப்பர்

25) $10l\ 500ml$

26) 250g

27) 1) உருளை 2) 02

28) 2m 25cm

29) 1) வியாழன் 2) 90

| | | | |
|---|---|---|---|
| 30) | 01 | 35) | 01 |
| 31) | 01 | 36) | 02 |
| 32) | 02 | 37) | 03 |
| 33) | 01 | 38) | 03 |
| 34) | 03 | 39) | 02 |

ஈழநாடு

# வடமேல் மாகாண ஆளுநர் கொரோனாவால் மரணம்!

கொழும்பு, டிசெ. 08

வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொளுரே தனது 83 ஆவது வயதில் காலமானார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான அவர், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இலங்கையில் சிரேஷ்ட அரசியல்வாதிகளுள் ஒருவரான ராஜா கொளுரே, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தவிசாளராகவும் பதவி வகித்துள்ளார்.

ஆசிரியர்களின் போராட்டம் தொடர்பில் அவர் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்தால் கட்சியிலிருந்து அவர் நீக்கப்பட்டார். எனினும், நீதிமன்றத்தை நாடி இதற்கு இடைக்காலத் தடை உத்தரவை அவர் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)



# 2022 ஜனவரியில் ரணில் பிரதமரா?


## அப்படி திட்டம் இல்லை என்கிறது அரசு

கொழும்பு, டிசெ. 09

பிரதமர் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்கும் எந்தவொரு திட்டமும் அரசிடம் இல்லை என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின்போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

2022 இல் பிரதமர் பதவியில் மாற்றம் வராது எனவும் அவர் குறிப்பிட்டார்.



2022 ஜனவரியில் பிரதமர் பதவியில் மாற்றம் இடம்பெறவுள்ளது எனவும், பஸில் அல்லது ரணில் விக்கிரமசிங்க அந்தப் பதவிக்கு நியமிக்கப்படலாம் எனவும் வெளியாகியுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டே மேற்படி கேள்வி எழுப்பப்பட்டது. (இ)

# மத்திய மாகாணத்தில் தாண்டவமாடும் டெங்கு

கண்டி, டிசெ. 08

மத்திய மாகாண மாத்தளை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் கடந்த 11 மாதங்களில் 1,048 டெங்கு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று மத்திய மாகாண சுகாதார தொற்று நோய் பிரிவு அறிவித்துள்ளது.

அதற்கமைய மாத்தளை மாவட்டத்தில் 217 தொற்றாளர்களும், கண்டி மாவட்டத்தில் 779 தொற்றாளர்களும், நுவரெலியா மாவட்டத்தில் 52 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

2020ஆம் ஆண்டு தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபோதும் 2021ஆம் ஆண்டு தொற்றாளர்களின் எண்ணிக்கை மத்திய மாகாணத்தில் குறைந்தளவே காணப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் இடம்பெற்று வருகின்ற சீரற்ற கால நிலை மற்றும் கடும் மழை காரணமாக இம்மாவட்டத்தில் எதிர்காலத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்புள்ளதால் பொது மக்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று மத்திய மாகாண சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். (இ)

# 5 பிள்ளைகளைத் தவிக்கவிட்டு காதலனுடன் தாய் தப்பியோட்டம்

குருநாகல், டிசெ. 08

தான் பெற்ற ஐந்து பிள்ளைகளை தனியாக விட்டுவிட்டு தாய் ஒருவர் தப்பியோடிய சம்பவம் ஒன்று குருநாகலில் இடம்பெற்றுள்ளது.

வாரியபொல அம்பகடவர பிரதேசத்தில் உள்ள காட்டுப் பகுதியிலுள்ள தென்னந்தோட்டத்தில் 2 முதல் 12 வயதுக்குட்பட்ட 5 பிள்ளைகளைத் தனியாக விட்டுவிட்டு குறித்த தாய் (வயது 38) தனது காதலனுடன் சென்றுள்ளார் என்று தெரியவந்துள்ள நிலையில், 5 பிள்ளைகளையும் பொலிஸார் தமது பொறுப்பில் கையேற்றுள்ளனர்.

இந்நிலையில், 38 வயதுடைய தாயாருக்கு 35 வயதுடைய நபருடன் தொடர்பு ஏற்பட்டுள்ள நிலையில் தனது 2 பெண் பிள்ளைகளையும், 3 ஆண் பிள்ளைகளையும் அந்தப் பிரதேசத்தில் உள்ள தோட்டம் ஒன்றில் தனியாக விட்டுவிட்டு அவர் சென்றுள்ளார்.

மீட்கப்பட்ட பிள்ளைகள் இரண்டு நாட்களாக சாப்பிடாமல் இருந்த நிலையில், அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்த பிள்ளைகளின் தந்தை அதிகளவில் மதுபானத்துக்கு அடிமையானவர் எனத் தெரியவந்துள்ளது.

பொலிஸாரின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட பிள்ளைகள் ஐவரும் நன்னடத்தை நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்படும் வரையிலும் அப் பிள்ளைகளின் பெரிய தாயாரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# கொரோனாவுக்கு மத்தியிலும் அபிவிருத்தியில் நாம் வெற்றி

## சபையில் பிரதமர் பெருமிதம்

கொழும்பு, டிசெ. 08

"உலகளாவிய கொரோனாத் தொற்று நிலைமைக்கு மத்தியில் முழு உலகமும் பின்தங்கிய நிலைக்கு தள்ளப்பட்ட போதிலும், நகர அபிவிருத்தி, வீடமைப்பு உள்ளிட்ட எமது அமைச்சின் விடயப்பரப்புக்கு உரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிந்தது என்று நம்புகின்றோம்."

- இவ்வாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிராமப்புற குறைந்த வருமானம் ஈட்டுவோரின் வீட்டுப் பிரச்னைகளை தீர்க்கும் வகையில் 'உங்களுக்கு ஒரு வீடு - நாட்டுக்கு எதிர்காலம்' வேலைத்திட்டத்தின் கீழ் 2024ஆம் ஆண்டளவில் 71 ஆயிரத்து 110 வீடுகளை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கான நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செலவின தலைப்பு விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் 4 இராஜாங்க அமைச்சுக்கள் செயல்படுகின்றன. நாம் இது வரை 21 நகர அபிவிருத்தித் திட்டங்களை நிறைவு செய்துள்ளோம். மேலும் 52 நகர திட்டங்கள் நிறைவடையும் தருணத்தில் உள்ளன. அத்துடன் 2024ஆம் ஆண்டளவில் மேலும் 136 நகர அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

பின்தங்கிய நகரங்களின் மேம்பாடு மற்றும் அழகுபடுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட 'நூறு நகரங்கள்' திட்டத்தின் கீழ் 117 நகரங்கள் அழகுபடுத்துவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டுக்குள் மேலும் 100 நகரங்களை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நகர்ப்புற போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக 12 வாகன நிறுத்தங்களை நிர்மாணிக்கும் திட்டங்களும் திட்டமிடப்பட்டுள்ளன.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்துக்கமைய ஒவ்வொரு குடும்பத்திற்கும் சகல வசதிகளுடன் கூடிய வீடொன்றை பெற்றுக் கொடுப்பதே அரசின் நோக்கமாகும். இதன் கீழ் நகர, கிராம, தோட்ட மற்றும் இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றுவதற்கும் வீடுகள் நிர்மாணிக்கப்படும்.



நகர்ப்புற குறைந்த வசதிகளை கொண்ட மக்களுக்காக 2024 ஆம் ஆண்டளவில் 50 ஆயிரம் வீடுகளின் நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்ய எதிர்பார்க்கிறோம். அதற்கமைய தற்போது 14 ஆயிரத்து 83 வீடுகளின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்து மக்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய 2024ஆம் ஆண்டளவில் கொழும்பு பிரதேசத்தில் காணப்படும் குறைந்த வசதிகளை கொண்ட மக்கள் குடியிருப்புகளை நவீன தொடர்மாடிக் குடியிருப்புகளாக மாற்றுவதும் அரசின் நோக்கமாகும்.

நடுத்தர வர்க்கத்தினருக்காக 1,108 வீடுகளை 2021ஆம் ஆண்டில் பயனாளர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், நடுத்தர வர்க்கத்தினருக்கான 13 வீட்டுத் திட்டங்களின் ஊடாக 6 ஆயிரத்து 128 வீடுகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபை ஊடாக செயற்படுத்தப்படும் இந்த வீட்டுத்திட்டங்களுக்கு அமைய, நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையாலும் 3 வீட்டுத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளமையை குறிப்பிட வேண்டும். இதனூடான 928 வீடுகள் நிர்மாணிக்கப்படும்.

அத்துடன் இந்த தொடர்மாடிக் குடியிருப்புகளின் கட்டுமானத்திற்கு இணையாக, அவற்றை முறையாகவும் திறம்படவும் ஒழுங்குபடுத்துவது முக்கியம். அதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றே கூற வேண்டும்.

கிராமப்புற குறைந்த வருமானம் பெறுவோரின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, 'உங்களுக்கு ஒரு வீடு - நாட்டிற்கு எதிர்காலம்' வீட்டுத் திட்டத்தின் கீழ், நாட்டின் 14 ஆயிரத்து 22 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி ஆண்டு தோறும் ஒரு கிராமத்திற்கு ஒரு வீடு நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் 2024 ஆம் ஆண்டுக்குள் நிர்மாணிக்கப்படவுள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை 71 ஆயிரத்து 110 ஆகும். அத் துடன், 'சியபத் தொடர்மாடி குடியிருப்பு' திட்டத்தின் கீழ் 6 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப் பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தோட்ட மக்களின் வாழ்க்கை தரத்தை கட்டியெழுப்புவதற்காக இந்திய நிதி உதவியின் கீழ் 4 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்ய முடிந்துள்ளது.

2022ஆம் ஆண்டு முதல் தோட்ட மக்களுக்காக 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் இந்திய நிதி உதவி திட்டமும் ஆரம்பிக்கப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவிக்க வேண்டும்.

அத்துடன் பிக்குமார்களின் பெற்றோருக்காக ஆரம்பிக்கப்பட்ட 'மிஹிந்து நிவஹன' திட்டத்தின் கீழ் 2 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டமும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சுற்றுலாத்துறையின் மறுமலர்ச்சிக்காக கடற்கரைப் பாதுகாப்பு மற்றும் கடற்கரை பூங்காக்களை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன், நாட்டைச் சூழவுள்ள சமுத்திர சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுப்பது தொடர்பிலும் நாம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றோம் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

மேல் மாகாணத்தில் வெள்ள நீரைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்தத் திட்டம் நிறைவு செய்யப்படும் பட்சத்தின் மேல் மாகாணத்தில் வெள்ள அபாயம் பெருமளவு குறைவடையும் என எதிர்பார்க்கின்றோம்" - என்றார். (இ)

ஈழநாடு




## ரொரன்றோ பாடசாலை ஒன்றில் முதல் ஓமைக்ரோன் தொற்றாளர்!

ரொரன்றோ, டிசெ. 08

ரொரன்றோ - ஸ்கார்பரோ பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் ஒமிக்ரோன் புதிய திரிபு கொரோனா தொற்றுக்குள்ளாகி ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக ரொரன்றோ பொது சுகாதாரி பிரிவினர் அறிவித்துள்ளனர்.

கனடாவில் பாடசாலை ஒன்றில் ஒமைக்ரோன் தொற்று நோயாளி கண்டறியப்பட்ட முதல் சம்பவமாக இது பதிவாகியுள்ளது.

எனினும் தொற்று உறுதி செய்யப்பட்டவர் மாணவரா? அல்லது பணியாளரா? என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

தொற்று உறுதி செய்யப்பட்ட நபரின் நெருங்கிய தொடர்புகள் அடையாளம் காணப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, ஒன்ராறியோ மாகாணத்தில் இதுவரை 13 பேர் புதிய ஒமைக்ரோன் கொரோனா திரிபால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ரொரன்றோ, டர்ஹாம், பீல் பிராந்தியம் மற்றும் யோர்க் பிராந்தியங்களில் ஒமிக்ரோனா தொற்று நோயாளிகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)



## நொந்து நலிந்த உணவகங்களுக்கு 'ஓமைக்ரோன்' திரிபு மற்றோர் அடி!

### வருட இறுதி விருந்துகள் பல ரத்து!

பாரிஸ், டிசெ. 08

ஒமைக்ரோன் திரிபு வைரஸின் எதிர் பாராத வருகை உணவகம் மற்றும் உணவு வழங்கும் சேவைகளுக்கு மீண்டும் நெருக்கடிகளை ஏற்படுத்தியிருக்கிறது.

நத்தார் மற்றும் வருட இறுதி விருந்துபசாரங்களுக்காகச் செய்யப்பட்ட முன்பதிவுகள் ரத்துச் செய்யப்பட்டு வருவதால் உணவகத் துறை மீண்டும் குழப்பத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேகமாகத் தொற்றக்கூடிய ஒமெக்ரோன் திரிபு மற்றொரு பெரும் சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த நெருக்கடிக்குள் நத்தார், வருட இறுதிக் கொண்டாட்டங்களை எவ்வாறு பாதுகாப்பது என்று அரசுகள் ஆலோசித்து வருகின்றன.

நத்தார் மற்றும் புத்தாண்டை முன்னிட்டு முன்பதிவு செய்யப்பட்ட விருந்துபசாரக் கொண்டாட்டங்களில் சுமார் 65 வீதமான பதிவுகள் கடந்த சில நாட்களில் வாடிக்கையாளர்களால் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்ற தகவலை உணவகங்கள் மற்றும் உணவு வழங்கல் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அமைப்புகள் தெரிவிக்கின்றன. பெரிய தொழில் நிறுவனங்கள் தங்களது நத்தார் விருந்துபசார நிகழ்வுகளை நடத்துவதைக் கைவிட்டுள்ளன.சாதாரணமாக உணவகங்களில் சாப்பிடுவோரது எண்ணிக்கையும் சமீப நாட்களில் குறைவடைந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் பெருந் தொற்று நோயினால் உலகெங்கும் பெரும் முடக்கத்தைச் சந்தித்த தொழில் துறைகளில் உணவகம் மற்றும் உணவு விநியோகத் தொழில்கள் முதலிடத்தில் உள்ளன. சமீப காலங்களில் சிறிது சிறிதாக வழமைக்கு திரும்பிக்கொண்டிருந்த உணவகங்களது செயற்பாட்டுக்கு ஒமைக்ரோன் திரிபு மீண்டும் அச்சுறுத்தலாக வந்துள்ளது.

# பேஸ்புக் நிறுவனத்துக்கு எதிராக ரோஹிங்கியா அகதிகள் வழக்கு!

### வெறுப்புப் பேச்சுகளை பரப்ப அனுமதிப்பதாக குற்றஞ்சாட்டி

லண்டன், டிசெ. 08

இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் உள்ள டசின் கணக்கான ரோஹிங்கியா அகதிகள் பேஸ்புக் சமூக வலைத்தள நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளனர்.

தங்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சுகளை பரப்ப பேஸ்புக் சமூக வலைத்தளம் அனுமதிப்பதாக குற்றஞ்சாட்டி இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

துன்புறுத்தப்பட்ட சிறுபான்மை யினருக்கு எதிரான வன்முறையை பேஸ்புக் நிறுவனம் தங்கள் பதிவுகள் ஊடாக ஊக்குவிப்பதாகக் குற்றஞ்சாட்டியுள்ள ரோஹிங்கியா அகதிகள், இதற்காக 150 பில்லியன் அமெரிக்க டொலர்களை பேஸ்புக் தங்களுக்கு இழப்பீடாகக் வழங்கவேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

பௌத்தர்கள் பெரும்பான்மையாக உள்ள மியான்மரில் 2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ ஒடுக்குமுறையின் போது 10,000 ரோஹிங்கியா முஸ்லிம்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.




இந்நிலையில் ரோஹிங்கியா அகதிகளின் குற்றச்சாட்டு குறித்து தற்போது மெட்டா என அழைக்கப்படும் பேஸ்புக் நிறுவனம் உடனடியாக பதிலளிக்கவில்லை.

இதேவேளை, வெறுக்கத்தக்க மற்றும் ஆபத்தான தவறான தகவல்கள் தங்கள் தளங்கள் ஊடாக பரப்பப்படுவதை பல ஆண்டுகளாக அனுமதிப்பதாக பேஸ்புக் நிறுவனம் மீது தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சிறைக்குள் ஆங் சாங் சூகி; உலக நாடுகள் கண்டனம்!



மியன்மார் முன்னாள் தலைவி ஆங் சாங் சூகி க்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமைக்கு சர்வதேச ரீதியாக கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பாட்லீட் இது முற்றுமுழுதாக அரசியல் நோக்கம் கொண்ட ஒரு தீர்ப்பு என கூறியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுக்கொள்கை வகுப்பாளர் ஜோசப் போரேலும் இது முற்று முழுதாக அரசியல் நோக்கம் கொண்ட ஒரு தீர்ப்பு என கூறியுள்ளார்.

அமெரிக்க இராஜாங்க செயலர் அன்ரனி பிளிங்கனும் இது ஒரு நீதியற்ற தீர்ப்பு. மியன்மாரில் சிறை வைக்கப்பட்டுள்ள ஆங் சாங் சூகியையும் சிறை வைக்கப்பட்டுள்ள ஏனைய ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகளையும் விடுதலை செய்யுமாறு மியன்மார் ஆட்சியாளர்களை கோருவதாக தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் வெளியுறவு செயலர் லிஸ் ட்ரஸ்சும் மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

சீன வெளியுறவுத்துறை பேச்சாளர் ஜாவோ லிஜியன், அண்டை நாடான மியன்மாரில் ஜனநாயகத்தை தக்க வைப்பதற்கு அனைவரும் அரசியல் யாப்பில் உள்ளபடி சட்ட வரையறைக்குட்பட்டு செயல்படவேண்டுமென கூறியுள்ளார்.

இது ஒரு ஏற்றுக்கொள்ளப்பட முடியாத தீர்ப்பு எனவும் விரைவில் மியான்மரில் ஜனநாயகம் மீண்டும் மலர வேண்டுமெனவும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராணுவ ஹெலிகொப்டர் பாகிஸ்தானில் விபத்து!

### 2 விமானிகள் உயிரிழப்பு

இஸ்லாமாபாத், டிசெ. 08

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் அந்நாட்டு இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று மோசமான வானிலை காரணமாக விபத்துக்குள்ளானதில் இரண்டு விமானிகள் உயிரிழந்தனர்.

உலகின் மிக உயரமான போர்க்களம் என வர்ணிக்கப்படும் சியாசென் பனிச்சரிவில் ஹெலிகொப்டர் விழுந்து நொருங்கியதாக பாகிஸ்தான் இராணுவம் அறிவித்தது.

இதில் இர்ஃபான் பெர்சா மற்றும் ராஜா ஜீஷான் ஜஹான்ஜெப் என்ற இரண்டு மேஜர்கள் உயிரிழந்தனர் என கூறப்பட்டுள்ளது. அப்பகுதிக்கு மீட்புப் படையினர் விரைந்துள்ளனர் என கூறப்பட்டது.

இந்தியா-பாகிஸ்தான் இடையிலான மோதல்களில் முக்கிய இடமாக விளங்கும் சியாசென்னில் பல வீரர்கள் இதற்கு முன்னர் கடுங்குளிராலும், பனிச்சரிவுகளாலும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)






# டேவிஸ் கிண்ணத்தை கைப்பற்றியது ரஷ்யா!

மட்ரிட், டிசெ. 08

டேவிஸ் வெற்றிக் கிண்ண இறுதிச் சுற்றில் குரோஷிய அணியை 2-0 என்ற கணக்கில் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது ரஷ்யா.

டேவிஸ் வெற்றிக்கிண்ண ரென்னிஸ் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் நடந்தது. முதல் ஒற்றையர் ஆட்டத்தில் ரஷ்யாவின் அந்த்ரே ரூப்லேவும் - குரோஷிய வீரர் போர்னோ கோஜோவும் மோதினர்.

இதில், முதல் 6-4 என கைப்பற்றினார் ரூப்லேவ். இரண்டாவது செற் 4-4 என சமநிலை ஏற்பட்ட போதிலும், சுதாகரித்து ஆடிய ரூப்லே 7-6 என்ற செற் கணக்கில் போர்னாவை வென்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் டேனில் மெத்வதேவும் - மரின் சிலிக்கும் மோதினர். முதல் செற்றை டை பிறேக்கரில் 7-6 என வென்றார் மெத்வதேவ். தொடர்ந்து இரண்டாவது செற்றை எவ்வித எதிர்ப்பும் இன்றி 6-2 என கைப்பற்றினார்.

இதன் மூலம் 2-0 என வென்ற ரஷ்ய அணி மூன்றாவது முறையாக டேவிஸ் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ஐ)

# எல். பி. எல். இருபது - 20 தொடர்: கொழும்பிடம் வீழ்ந்தது காலி!

கொழும்பு, டிசெ. 08

தனஞ்சய டி சில்வாவின் சகலதுறை ஆட்டத்தால் காலி அணியை 4 விக்கெட்களால் வெற்றி கொண்டது கொழும்பு அணி.

லங்கா பிறீமியர் லீக் எனப்படும் எல். பி. எல். இருபது - 20 தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த மூன்றாவது போட்டியில் காலி கிளாடியேற்றர்ஸ், கொழும்பு ஸ்ரார்ஸ் அணிகள் மோதின.

கொழும்பு, ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற காலி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆனாலும், ஆரம்பம் முதலே கொழும்பு ஸ்ரார்ஸ் அணியின் ஆக்ரோஷமான பந்து வீச்சுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை பறிகொடுத்தது. ஆறு ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் இருவரும் ஆட்டமிழந்து வெளியேறினர். அணி சார்பில் பென் டங்க் 38 ஓட்டங்களையும், இசுறு உதான 25 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.



நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 116 ஓட்டங்களை பெற்றது காலி கிளாடியேற்றர்ஸ்.

கொழும்பு அணியின் பந்து வீச்சில் தனஞ்சய டி சில்வா, துஷ்மந்த சாமீர, அகில தனஞ்சய ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

117 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு அணியின் ஆறு விக்கெட்களை காலி கிளாடியேற்றர்ஸின் பந்து வீச்சாளர்கள் பதம் பார்த்தனர். இதனால் இலகுவான வெற்றி இக்கட்டான நிலைக்கு சென்றது.

எனினும், 18 ஆவது ஓவரை நுவான் துஷார பந்து வீசினார். மூன்றாவது பந்தில் சந்திமால் ஒரு பௌண்ட்ரியை விளாசி அணியை வெற்றி பெறச் செய்தார். இறுதியில் 17.3 ஓவர்களில் 6 விக்கெட்களை மட்டுமே இழந்து வெற்றி இலக்கான 117 ஓட்டங்களைப் பெற்றது கொழும்பு அணி.

சந்திமால் 26 ஓட்டங்களையும், தனஞ்சய டிசில்வா 24 ஓட்டங்களையும், டேவிட் வைஸ் 22 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

காலியின் பந்துவீச்சில் நுவான் துஷார, புலின தரங்க தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். (ஐ)

# கண்டியை 20 ஓட்டங்களால் வெற்றி கொண்டது தம்புள்ளை!



கொழும்பு, டிசெ. 08

கண்டி அணியை 20 ஓட்டங்களால் வெற்றி கொண்டு அசத்தியது தம்புள்ளை அணி.

எல். பி. எல். இருபது - 20 தொடரில் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் நடந்த போட்டியில் தம்புள்ளை ஜெயண்ட்ஸ் அணியும் கண்டி வோரியர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற தம்புள்ளை அணியின் தலைவர் தசுன் சானக முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி, களமிறங்கிய தம்புள்ளை அணி அதிரடியாக ஆடி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 190 ஓட்டங்களை குவித்தது.

முதல் விக்கெடுக்காக ஜோடி சேர்ந்த நிரோஷன் திக்வெல்ல - பிலிப் சால்ட் ஆகியோர் 97 ஓட்டங்களை பகிர்ந்தனர். திக்வெல்ல 37 ஓட்டங்களுடனும், சால்ட் 27 பந்துகளில் 5 சிக்ஸர், 4 பௌண்ட்ரிகள் அடங்கலாக 64 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர். இவர்களுக்கு அடுத்தபடியாக தசுன் சானக 24 ஓட்டங்களையும், ரமேஷ் மெண்டிஸ் 22 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்று ஆட்டமிழந்தனர். கண்டி வோரியர்ஸின் பந்து வீச்சில் லஹிரு குமார3 விக்கெட்களையும், அல் அமீன் 2 விக்கெட்களையும், சசிந்து கொலம்பகே மற்றும் ரோவ்மேன் பவுல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

191 ஓட்டங்கள் என்ற கடினமான இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அஞ்சலோ பெரேரா தலைமையிலான கண்டி வோரியர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 170 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதில், ரோவ்மேன் பவுல் 42 ஓட்டங்களையும், சசிந்து கொலம்பகே 27 ஓட்டங்களையும் மற்றும் அஞ்சலோ பெரேரா 24 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

தம்புள்ளை ஜெய்ண்ட்டின் பந்து வீச்சில் நுவான் பிரதீப் மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், இம்ரான் தாகீர், தசுன் சானக ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஐ)

# அயர்லாந்து தொடருடன் ஓய்வு பெறுகிறார் கெய்ல்?

ஜமைக்கா, டிசெ. 08

அயர்லாந்து அணிக்கு எதிரான இருபது - 20 போட்டியுடன் கிறிஸ்கெய்ல் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்யவுள்ள அயர்லாந்து அணி 3 ஒருநாள், ஓர் இருபது - 20 போட்டியில் விளையாடவுள்ளது.

ஜனவரி 8ஆம் திகதி ஜமைக்காவில் ஆரம்பமாகும் இந்தத் தொடரில், ஜனவரி 16ஆம் திகதி இருபது - 20 போட்டி நடக்கவுள்ளது.

உலகக் கிண்ணத் தொடருடன் ஓய்வு பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட கிறிஸ் கெய்ல் தனது கடைசி போட்டியை தனது சொந்த ஊரான ஜமைக்காவில் விளையாட விரும்பினார். இதேபோல், அவரின் சொந்த மண்ணில் அயர்லாந்துக்கு எதிரான இருபது -



20 போட்டி நடப்பதால் இந்தப் போட்டியுடன் அவர் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவார் என்று கூறப்படுகின்றது.

42 வயதான கிறிஸ் கெய்ல் 103 டெஸ்ட், 301 ஒருநாள், 79 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆஷஷ் முதல் போட்டியில் அண்டர்சன் பங்கேற்கார்!

லண்டன், டிசெ. 08

ஆஷஷ் தொடரின் முதல் டெஸ்டிலிருந்து இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் விலகியுள்ளார்.

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5 போட்டிகள் கொண்ட ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

இரு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் ஆஷஷ் தொடர், இந்த வருடம் அவுஸ்திரேலியாவில் நடைபெறுகிறது.

இந்தத் தொடரின் முதல் போட்டியிலிருந்து இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரானஜேம்ஸ் அண்டர்சன் விலகியுள்ளார். இரண்டாவது போட்டி பகல் - இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளமையால் அதில் பங்கேற் கும் நோக்கிலேயே முதல் போட்டி யிலிருந்து விலகியுள்ளார்.

39 வயதான வேகப்பந்துவீச்சாளரான அண்டர்சன் ஆஷஷ் தொடரின் அனைத்துப் போட்டிகளிலும் பங்கேற்பது கடினமானது. இதனாலேயே அவருக்கு முதல் போட்டியில் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.






# நேற்றும் பாராளுமன்ற அமர்வு சஜித் அணியால் புறக்கணிப்பு

## எம்.பிக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை

**கொழும்பு, டிசெ. 08**
**ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டாவது நாளாக நேற்றும் சபை அமர்வைப் புறக்கணித்துள்ளனர்.**



சபைக்குள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வரையில் பாராளுமன்ற அமர்வைப் புறக்கணிப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் தீர்மானம் எடுத்துள்ளனர்.

இதன்படி நேற்றுமுன்தினம் சபை அமர்வில் கலந்துகொள்வதைத் தவிர்த்த அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் நேற்றும் அதில் கலந்துகொள்ளவில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினர் மனுஷ நாணயக்காரவுக்கு உரையாற்றுவதற்காக மேலதிக நேரத்தை வழங்காமை தொடர்பில் சபையில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

இதன்போது சபைக்குள் அமைதியின்மை ஏற்பட்ட நிலையில், மறுநாள் சனிக்கிழமை அது தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இது தொடர்பாக இணக்கம் காணப்படாத நிலையில், அவர்கள் சபை நடவடிக்கைகளைப் புறக்கணிக்கத் தீர்மானித்தனர். (இ)

# பிரியந்த படுகொலை இரு நாடுகளின் உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தாது!

## பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவர் உறுதி

கொழும்பு, டிசெ. 08

பிரியந்த குமாரவின் படுகொலையானது இரு நாடுகளின் சுமுக உறவுகளில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவர் மொஹான் விஜய் விக்கிரம உறுதியளித்தார்.

"பாகிஸ்தானும் இலங்கையும் நட்புறவு கொண்ட நாடுகளாகவே இருக்கும். இந்தச் சம்பவம் எமது உறவுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என நான் உறுதியளிக்கிறேன்" எனவும் அவர் குறிப்பிட்டார்.



இந்தச் சம்பவம் துரதிர்ஷ்டவசமானது என குறிப்பிட்ட அவர், பாகிஸ்தான் அரசின் ஆதரவைப் பாராட்டியதோடு பாகிஸ்தான் மக்களின் அனுதாபங்களுக்கும் இரங்கலுக்கும் நன்றி தெரிவித்தார்.

"பிரியந்தவின் குடும்பத்துக்கு நீதி கிடைக்க பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நான் நம்புகின்றேன். பாகிஸ்தான் உடனடி நடவடிக்கை எடுத்திருப்பதை நாங்கள் பார்த்தோம்" எனவும் அவர் மேலும் கூறினார்.

"பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் சமூக, பாதுகாப்பு மற்றும் வர்த்தக உறவுகள் உள்ளன. மேலும், இந்தச் சம்பவம் தற்போதுள்ள உறவை பாதிக்காது" எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, பாகிஸ்தானின் பி.டி.ஐ. கட்சியின் தலைவர் அர்ஷாத் தாட், இலங்கைத் தூதுவரிடம் இவ்வாறான சம்பவத்தில் மதம் பயன்படுத்தப்பட்டது வருத்தமளிப்பதாகக் கூறியதோடு, கட்சி சார்பில் மன்னிப்பும் கோரியுள்ளார். (இ)

# பிரியந்தவின் குடும்பத்துக்கு 2.5 மில்லியன் ரூபா இழப்பீடு

கொழும்பு, டிசெ. 06

பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட இலங்கையரான பிரியந்த குமாரவின் குடும்பத்தினருக்கு 2.5 மில்லியன் ரூபா இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக ஊழியர் நலனோம்புகை நிதியத்தின் மூலம் குறித்த தொகையை வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா முன்வைத்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண இந்தத் தகவலை வெளியிட்டார். (இ)

# கொக்கட்டிச்சோலை ஆலய மடத்திலிருந்து வெட்டுக்காயத்துடன் ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, டிசெ. 08

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை - கச்சேனை பகுதியிலுள்ள ஆலயமொன்றின் மடத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தின் கழுத்துப் பாகத்தில் வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் ஏற்பட்ட முறுகல் நிலையால், கோயிலில் உறங்கச் செல்வதாக தெரிவித்து வீட்டிலிருந்து புறப்பட்டு சென்ற நபரே ஆலய மடத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அம்பலந்துறையை சேர்ந்த 47 வயதான நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று பிரேத பரிசோதனைகள் இடம்பெற இருந்த நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ)

# மரணஅறிவித்தல்



தோற்றம்
10 - 11 - 1947

மறைவு
05 - 12 - 2021

## திருமதி விவேகானந்தராசா தவமலர்

முல்லைத்தீவு தண்ணீரூற்று மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விவேகானந்தராசா தவமலர் அவர்கள் 05.12.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், விவேகானந்தராசா அவர்களின் அன்பு மனைவியும், கருணானந்தராசா, தவராணி, சறோசா, காலஞ்சென்ற தவறஞ்சிதம் மற்றும் வனிலாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான வித்தியானந்தராசா, சர்வானந்தராசா, சச்சிதானந்தராசா, பாக்கியநாதன் மற்றும் யோகராணி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், யசோதரன் (இலங்கை), குமுதரஜனி (லண்டன்), கிரிதரன்(சுவிஸ்), தசீந்திரன்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகுதாயாரும், சுகந்தி (ஆசிரியர்- இந்து தமிழ்கலவன் பாடசாலை),றெஜிந்திரன் (லண்டன்), சுபாஜினி (இந்தியா), லக்சி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், வெர்ஜினி, றெமி, திலக்சன், சயூகன், கரீஸ்மன், டிஷான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 07.12.2021 செவ்வாய்க்கிழமை அன்று மு.ப 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கற்பூரப்புல் இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**விவேகானந்தராசா (கணவர்)** - 0769649806
**யசோதரன் (மகன்)** - 0769216062
**குமுதரஜனி(மகள்)** - 00447956085449
**கிரிதரன் (மகன்)** - 0041779084707
**தசீந்திரன் (மகன்)** - 0041763181105

தகவல்:
**குடும்பத்தினர்.**

## திட்டமிட்ட...

பெரும் அநீதி இளைத்துள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அரச தரப்பும் சபையில் குற்றம் சாட்டின.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடிய நிலை யில் அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை விவாதங்களின்றி திருத்தங்கள், தெளிவுபடுத்தல் களுடன் நிறைவேற்ற முற்பட்ட போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான சார்ள்ஸ் நிர்மல நாதன் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மீது முன்வைத்த குற்றச்சாட்டையடுத்தே அரச தரப்பினரும் தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு ஆதரவளித்தும் எதிர்க்கட்சித் தலைவரை கடுமையாக விமர்சித்தும் கருத்துக்களை முன்வைத்தனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. யான சார்ள்ஸ் நிர்மல நாதன் பிரதான எதிர்க்கட்சி, தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு செய்த அநீதி தொடர்பில் சபாநாயகருக்கு முறையிடுகையில்,

வரவு - செலவுத் திட்டத்தில் அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தை ஆரம்பித்து வைக்கும் எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்களின் பெயர் பட்டியல் எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தினால் சபாநாயகருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இந்த எம்.பி.க்கள் பெயர் பட்டியலில் 33 எம். பிக்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த பெயர் பட்டியலில் இந்த பாராளுமன்றத்தில் 3 எம்.பி. க்களை மட்டும் கொண்ட ஜே .வி. பியின் இரு எம்.பிக்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால் 10 எம்.பிக்களைக் கொண்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பை சேர்ந்த எந்தவோர் எம்.பி. யின் பெயரும் இந்தப் பட்டியலில் இல்லை.

எமது பிரதேசங்களிலும் பல பிரச்னைகள் உள்ளன. நாம் அதனை இங்கு பேச வேண்டும். எமக்கு அமைச்சரவை அமைச்சர்களும் இல்லை. ஆகவே நாம் எமது பிரச்சினைகளை இங்கு பேசுவதற்கு நேரம் தேவை. எமக்கு திட்டமிட்ட ரீதியில் அநீதி இழைக்கப்படுகின்றது. விவாதத்தை ஆரம்பித்து வைக்கும் பெயர் பட்டியலில் எமது பெயர் ஏன் உள்வாங்கப்படவில்லை? என சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன பதிலளிக்கையில், இப்பிரச்னைக்கு இப்போது தீர்வு வழங்க முடியாது. அந்த பெயர் பட்டியலை எதிர்க்கட்சி தலைவர் அலுவலகம் தான் தயாரித்துள்ளது - என்றார்.

இதன்போது எழுந்த அரச தரப்பு எம்.பி. யான டிலான் பெரேரா, சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பும் விடயம் நியாயமானது. எதிர்க்கட்சித் தலைவர் மிகப் பெரும் அநீதி செய்துள்ளார். இந்த பாராளுமன்றத்தில் பல கட்சிகள் உள்ளன. அதில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு பிரதானமானது. அவர்கள் ஒரு மக்கள் பிரிவை பிரதி நிதித்துவப்படுத்துகின்றவர்கள். இவர்களுக்கு எதிர்க்கட்சித்தலைவர் செய்தது அநீதி. சகல நிலையியல் கட்டளைகளும் இந்த சபைக்கு கட்டுப்பட்டது. எனவே தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு இழைக்கப்பட்ட அநீதி சரி செய்யப்பட வேண்டும். தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு பேச அனுமதியில்லாது விட்டால் ஏன் இந்த விவாதம்? பாராளுமன்றம்? எனக் கேட்டார்.

இதைத் தொடர்ந்து அரச தரப்பினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிக்கவே, அவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, விவாதங்கள் இல்லை என்பதனால் உங்களுக்கு திருத்தங்கள், தெளிவுபடுத்தல்களை வழங்க நேரம் தரப்படும் என்றார்.

## பாராளுமன்றத்தில்...

வதாக சுமந்திரன் எம். பி. தனது சிறப்புரிமையை பயன்படுத்தி இந்த சபையில் கூறியிருந்தார். அவர் முடியுமானால் இந்தக் கருத்தை பொதுவெளியில் ஊடகங்களுக்கு சொல்ல முடியுமா என்று கடல் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சவால் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கடல் தொழில் அமைச்சு மீதான திருத்தங்கள், தெளிவுபடுத்தல்களை முன்வைக்கும்போதே இவ்வாறு சவால் விடுத்த அவர் மேலும் கூறுகையில்,

இந்த சபையில் நான் இல்லாத நேரம் இரு எம். பிக்கள் எனது பெயரை இரு விடயங்களோடு சம்பந்தப்படுத்தியிருக்கின்றார்கள். அதில்முதலாவது சுமந்திரன் எம்.பி. இரண்டாவது அனுரகுமார திஸாநாயக்க. முதலாவது சுமந்திரனின் அந்த பேச்சை ஹன்சாட்டிலிருந்து அகற்ற வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன். ஏனெனில் அது முற்றிலும் பொய்யானது. அவர் வெளியில் ஒரு கதையையும் பாராளுமன்றத்தில் தந்து சிறப்புரிமையை பயன்படுத்தி பொய்யான குற்றச்சாட் டை அவர் முன்வைத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் 500இற்கும் மேற்பட்ட இழுவை வலைப் படகுகள் இருக்கின்றன. இவற்றிடமிருந்து, நான் ஓர் இரவுக்கு ஒரு படகிடமிருந்து 5000 ரூபாய் கப்பமாக பெறுவதாகவும் அதனால் தான் அது அனுமதிக்கப்படுவதாகவும் சுமந்திரன் எம். பி. தனது சிறப்புரிமையை பயன் படுத்தி இந்த சபையில் கூறியிருந்தார். இதற்கு அந்த கிராமத்து மக்கள் சுமந்திரனுக்கு தகுந்த பாடத்தை படிப்பித்திருந்தார்கள். அந்தக் கிராமத்தில் ஹர்த்தால் நடத்தி சுமந்திரனின் உருவ பொம்மையையும் எரித்து தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

பாராளுமன்றத்தில் எதனையும் வாந்தி எடுக்கலாமென சிலர் நினைக்கின்றனர். பொதுவெளியில் நாளை அவர் இந்த கருத்தை ஊடகங்களுக்கு சொல்வாரா என நான் வெளிப்படையாக அவரிடம் கேட்கின்றேன். அப்படி சொல்வாராக இருந்தால் நான் நீதிமன்றத்தின் மூலம் அது தொடர்பான உண்மையை நிரூபிக்க முடியும் - என்றார்.

## தென்னாபிரிக்காவின்...

இந்திய வம்சாவழியினரான இவர், நேற்று தனது 85ஆவது வயதில் காலமானார்.

சர்வதேச உறவுகளுக்கான பிரதி அமைச்சராக இருந்த இவர் சர்வதேச ரீதியாக தமிழர் பிரச்னை தொடர்பாக இடம்பெற்ற பல பேச்சுகளிலும் பங்கேற்றிருந்தவர். 1990களில் இலங்கை வந்த அவர், பல்வேறு சந்தர்ப்பங்களில் ஈழத் தமிழர் விடயம் தொடர்பான செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்தார்.

1998ஆம் ஆண்டு தென்னாபிரிக்க பாராளுமன்றக் குழுவுடன் இலங்கை வந்த அவர் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் உறுப்பினரான இப்ராஹிம் நிறவெறி அரசாங்கத்துக்கு எதிராக போராடியவராவார். இதற்காக அவர் ராபன் தீவு சிறையில் 15 ஆண்டுகள் சிறைவைக்கப்பட்டிருந்தார். 1994இல் நிறவெறி அரசாங்கம் முடிவுக்கு வந்த பின்னர் நடந்த தேர்தலில் வெற்றி பெற்றிருந்தார் என்பதும் அறியத்தக்கவை. (ஐ)

## இன்று முதல் சபை...

பெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மனுஷ நாணயக்கார எம்.பி மீதான ஆளுங்கட்சி எம்.பிக்களின் தாக்குதல் முயற்சியையடுத்து ,பாராளுமன்ற வளாகத்தில் எம்.பிக்களுக்கு பாதுகாப்பில்லையென தெரிவித்து வரவு-செலவுத் திட்ட விவாதத்தை ஐக்கிய மக்கள் சக்தி பகிஷ்கரித்திருந்தது. (அ)

## உயர்நீதிமன்ற...

சாத்திட்டனர்.

கட்டடத்தை முழுமையாக அழித்து மீள நிர்மாணிக்குமாறு சீனத் தூதரகம் கூறியது. எனினும், கட்டடத்தை புனரமைக்கவே திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கட்டம் கட்டமாக இந்தப் பணிகள் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வன ஜீவராசிகள்,...

பட்ட இடமாகவும். அதேபோல் கூகுள் வரைபடத்தில் பார்த்து கொஞ்சம் பச்சை வட்டமாக இருந்தால் அதுவும் ஒரு காட்டு பிரதேசமாகவும் ஒதுக்கப்படும் அவலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டும் முன்னெடுக்கப்படுவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

வன ஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு என்ற இரு திணைக்களங்களும் உண்மையில் வனப் பாதுகாப்புக்கா அல்லது வன ஜீவராசிகள் பாதுகாப்புக்கா இருக்கின்றன என்ற கேள்வி எமது மக்கள் மத்தியில் பரவலாக இருக்கின்றது. ஏனென்றால் இந்த இரு திணைக்களங்களினாலும் அங்கு நடைபெறுகின்ற விடயங்களை பார்க்கின்றபோது அந்தக்கேள்வி நியாயமாகவே இருக்கும்.

6 அடிக்கு மேற்பட்ட மரங்கள் ஒரு இடத்தில் இருக்குமென்றால் அந்த இடம் காடாக ஒதுக்கப்பட்ட இடமாக பார்க்கப்படுகின்றது. அதேபோல் இந்த கூகுள் வரைபடத்தில் பார்த்து கொஞ்சம் பச்சை வட்டமாக இருந்தால் அதுவும் ஒரு காட்டு பிரதேசமாக ஒதுக்கப்படுகின்றது, இவ்வாறான நடவடிக்கைகள் வடக்கு, கிழக்கில் மட்டுமே நடக்கின்றன. வடகிழக்கில் யாழ்ப்பாணத்தில் குறைவாக இருந்தாலும் வன்னியில் பல இடங்களில் நடக்கின்றன.

காடு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இருக்கின்ற காடுகளை பாதுகாக்க வேண்டுமே தவிர காடுகள் இல்லாத இடங்களை காடுகளாக்கக்கூடாது. வடக்கு, கிழக்கின் குடி பரம்பலை இன்னும் மாற்றுவதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன -என்றார்.

## புதுடில்லி...

கூட்டமைப்பின் இந்தியப் பயணம் பிற்போடப்பட்டமைக்கு மாவை சேனாதிராசாவின் மகனது திருமணம்தான் காரணம் எனவும், மாவை சேனாதிராசாவே இந்தப் பயணத்தை பிற்போடுமாறு சம்பந்தனிடம் கூறினார் என்று வெளியாகிய செய்திகள் குறித்து விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

கூட்டமைப்பின் இந்தியப் பயணம் முன்னரே திட்டமிட்ட ஒன்று. எனது மகனின் திருமணமும் முன்னரே திட்டமிடப்பட்டது. எனது மகனின் திருமணத்துக்காக இந்தியப் பயணத்தை ஒத்திப்போடுமாறு கோர நான் விரும்பியிருந்தால் அதனை தலைவர் சம்பந்தனிடம் முன்னரே கூறியிருப்பேன். கடைசி நேரத்தில் அதனை ஒத்திப்போடுமாறு கோரும் தேவை எனக்கு இல்லை.

எனது மகனின் திருமணத்துக்காக தமிழர் நலன் சார்ந்த விடயத்தை தள்ளிப்போடுமாறு கோரும் அளவுக்கு நான் சுயநலன் கொண்டவன் அல்லன்.

இந்தியப் பயணம் அறிவிக்கப்பட்டவுடன் அதில் என்னால் பங்கேற்கமுடியாது என்பதால் அங்கு நடக்கும் சந்திப்புக்களில் என்னென்ன விடயங்களை எடுத்துரைக்க வேண்டும் என்பது குறித்து பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் நான் பேசுவதற்கும் ஆயத்தம் செய்திருந்தேன்.

எனது மகனின் திருமணம் என்ற ஒன்றுக்காக தமிழ் மக்களின் நலன் சார்ந்த இந்த சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது என்றும் நான் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கு கூறியிருந்தேன்.

இந்தியத் தலைவர்களுடனான சந்திப்பு 7ஆம், 8ஆம் திகதிகளில்தான் நடைபெறவிருந்தது. எனது மகனின் திருமணம் 9ஆம் திகதியே நடைபெறுகின்றது. இந்த சந்திப்பில் நான் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்று நினைத்திருந்தால் 7ஆம், 8ஆம் திகதிகளில் சந்திப்புகளில் பங்கேற்றுவிட்டு கூப்பிடு தூரத்தில் உள்ள இந்தியாவில் இருந்து உடனடியாக நாடு திரும்பி மகனின் திருமணத்திலும் பங்கேற்றிருப்பேன். ஆயினும் இந்த சந்திப்பில் நான் கட்டாயமாக பங்கேற்கவேண்டும் என்று நினைக்கவில்லை. அதனால்தான் அவர்களை சந்திப்பில் பங்கேற்கச் செல்லுமாறு கூறியிருந்தேன்.

இந்தியப் பயணத்தை ஒத்திப்போடுமாறு இரா. சம்பந்தனே இந்தியத் தூதரகத்துடன் தொடர்புகொண்டு கோரினார். அவர் ஏன் அப்படி கோரினார் என்பது எனக்கு தெரியாது.

நான் தான் இந்தப் பயணத்தை பிற்போடுமாறு கோரினேன் என வெளியாகும் தகவல்கள் பொய்யானவை-என்றார்.

## இனப்பரம்பலை...

அமைப்புக்கள் இலங்கைக்கு உதவிகளை வழங்குகின்றனவென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி.யான செல்வராசா கஜேந்திரன் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றியபோதே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் கூறுகையில்

வவுனியா வடக்கின் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வெடிவைத்தகுளம் பகுதியில் 1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவம், ஊர்காவல் படைகளின் அச்சுறுத்தல் காரணமாக அங்கிருந்து மக்கள் வெளியேறி இருந்தார்கள்.அந்த மக்கள் மீளவும் அங்கு மீளக்குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் அந்தப் பகுதியில் பெரியக்கட்டிக்குளம் ஒதுக்க காடு என அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதன் எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டன. யுத்தம் 2009ஆம் ஆண்டு முடிவடைந்த பின்னரும் அங்கு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் அப்பகுதியில் கச்சல்சமணங்குளம் என்று சொல்லப்படுகின்ற கிராமத்தின் பெயர் ‘சப்புமல் தென்ன’ மாற்றம் செய்யப்பட்டு அங்கு பெரியதொரு ‘சப்புமல் கஸ்கட’என்ற விகாரையும் அமைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது இந்த பெரியக் கட்டிக்குளத்தையும் அதற்கு பக்கத்திலிருந்த இன்னொரு சிறிய குளத்தையும் இணைத்து காடழிக்கப்பட்டு ஒரு பாரிய குளம் அமைக்கப்பட்டு தமிழர்கள் விவசாயம் செய்து வந்த 300 ஏக்கர் வயல் நிலங்கள் உள்வாங்கப்பட்டு சிங்களமக்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள். அந்த விகாரைக்கு செல்வதற்காக இப்போது நெடுஞ்சலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் ஆதரவோடு ஒரு காப்பெற் வீதியும் அமைக்கப்பட்டு வருகின்றது

காடுகள், ஒதுக்க காடுகள் என்ற சட்ட திட்டங்களானது வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில் தமிழர்களின் நிலங்களை பறிமுதல் செய்து பெரும்பான்மையினத்தவர்களின் தேவைகளுக்காக கொடுத்து ஓர் இனக்கரைப்பு செய்வதன் மூலம் எமது இனத்தை இல்லாமல் செய்யும் ஒரு வேலைத்திட்டமே இங்கு நடைபெறுகின்றது. இந்த விடயத்தில் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும். தமது பகுதிகளில் தமிழர்கள் முழுமையாக மீளக்குடியமர நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

அடுத்ததாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் 23,803ஏக்கர் ஏனைய காடுகள் என்ற பகுதிக்குள் வரும் காடுகளை ஒதுக்க காடுகளாக புதிதாக அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இது உங்களின் சுற்று நிருபங்களுக்கும் தீர்மானங்களுக்கும் முரணானது. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2021/2ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் காணி அமைச்சினால் பிரதேச செயலகங்களுக்கு ஏனைய காடுகள் என்பதனை நீங்கள் நிர்வாகம் செய்ய முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட உங்களுக்கு உதவி செய்யும் அமைப்புக்களிடம் நான் கேட்க விரும்புவது என்னவென்றால் நீங்கள் இலங்கைக்கு உதவிகளை வழங்குவது தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றியமைத்து தமிழ் தேசத்தின் இருப்பை இல்லாமல் அழிப்பதற்கான வேலைத்திட்டங்களுக்காகவா எனக் கேள்வி எழுப்பினார்.

Eelanadu ஈழநாடு

## கடலாமை கடத்திய மூவர் கைது

புத்தளம், டிசெ. 08

புத்தளம் - கற்பிட்டி பகுதி யில் சட்டவிரோதமான முறையில் கடலாமைகளைக் கடத்த முயன்ற குற்றச் சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி, கொச்சிக்கடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவரே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபர்களை புத்தளம் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ)

## மரண அறிவித்தல்

மலர்வு 18 - 08 - 1966



உதிர்வு 04 - 12 - 2021

### பசுபதிப்பிள்ளை ரகுமாறன்

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Zürich ஐ வதிவிடமாகவும் கொண்ட பசுபதிப்பிள்ளை ரகுமாறன் அவர்கள் 04-12-2021 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வரும், கெர்மியா அவர்களின் அன்புக் கணவரும், அபிஷா, அதிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஜனி, ராகினி, ராகவன் (சுவிஸ்), ரவிந்திரன், ரமணி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சண்முகநாதன், ஶ்ரீஸ்கந்தராசா, சிவகுமாரி(சுவிஸ்), சிவகௌரி, கருணாநிதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அமலன், ஆரோன், அயோனா, அன்றியா, அர்ச்சனா, அகானா, அபீரன், அனுஜன், அஜந்தன் ஆகியோரின் அன்பு மாமாவும், ஆர்ணிஜா, சுரேகா, ஆர்த்திகா, அபிலன், அபிநயா, அபிராமி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

பார்வைக்கு
Tuesday, 07 Dec 2021 2:00 PM - 4:00 PM
Wednesday, 08 Dec 2021 2:00 PM - 4:00 PM
Thursday, 09 Dec 2021 2:00 PM - 4:00 PM
Friedhof Obertilistrasse 14, 8134 Adliswil, Switzerland

கிரியை
Friday, 10 Dec 2021 1:00 PM - 4:00 PM
Friedhof Obertilistrasse 14, 8134 Adliswil, Switzerland

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**ராகவன் - சகோதரன்**
Mobile : +41789133924

தகவல்:
**குடும்பத்தினர்.**

# நல்லாட்சியில் நாட்டையும் மீட்டு வீட்டையும் நாம் பாதுகாத்தோம்

## ஆளுந்தரப்புக்கு ரணில் பதிலடி

கொழும்பு, டிசெ. 08

**“எங்கள் நல்லாட்சியில் நாம் நாட்டு பொருளாதாரத்தை மட்டுமல்ல வீட்டுப் பொருளாதாரத்தையும் பாதுகாத்தோம். மக்களுக்கு மூவேளைகளும் சாப்பிடக்கூடிய நிலைமை காணப்பட்டது. சமையல் அறையின் பாதுகாப்புக்கூட உறுதிப்படுத்தப்பட்டது. அங்கு வெடிப்புகள் எதுவும் இடம்பெறவில்லை.”**

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி. நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

2015 முதல் 2019 வரை நாட்டு பொருளாதாரம் எப்படி இருந்தது என ஆளுங்கட்சியினர் எழுப்பிய கேள்விக்குப் பதிலடி கொடுக்கும் விதத்திலேயே ரணில் இவ்வாறு குறிப்பிட்டார்.

“அக்காலப்பகுதியில் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்தது. மக்களின் வருமானம் குறையவில்லை. தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. இன்று அந்நிலைமை இல்லை. மக்களும் அந்த காலமே போதும் என தற்போது எண்ணுகின்றனர்” என்றும் ரணில் குறிப்பிட்டார்.

அத்துடன், அரசின் அந்நிய செலாவணி கையிருப்பு தொடர்பிலும் சபையில் ரணில் கேள்வி எழுப்பினார். (இ)



# குடாநாட்டில் கரையொதுங்கும் சடலங்கள்: காணாமல்போனோரின் உறவுகள் அச்சம்!

## உடன் விசாரணை வேண்டும் என்று சுரேஷ் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 08

யாழ்ப்பாணம் மாவட்ட கடற்கரைகளில் சடலங்கள் கரையோதுங்கும் நிலையில் இதுவரை தகவல்கள் வெளியாக நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மத்தியில் அச்சங்கள் தோன்றியுள்ளன என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ். மாவட்ட கரையோரங்களில் கடந்த வாரம் ஆறு சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. இது தொடர்பில் எந்தவிதமான தகவல்களும் வெளிவரவில்லை. அதனால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய தகவல்கள் வெளிவராத நிலையில் இந்த சடலங்கள் கரையொதுங்குகின்றன.



கடற்கரைகளில் சடலங்கள் ஒதுங்கி வருகின்றன எனில் கடலில் விபத்துக்கள் நடைபெற்று இருக்க வேண்டும். ஒன்றில் இலங்கை மீனவர்கள் அல்லது இந்திய மீனவர்களினது மீன்பிடிப் படகுகள் விபத்துக்குள்ளாகி இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு விபத்துக்கள் நடைபெற்றதாக தகவல் இல்லை.

இதனால் காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அச்சத்தில் உள்ளனர். ஆனால், அரசு எந்த விசாரணைகளையும் முன்னெடுக்கவில்லை. மக்களுக்கு விவரங்களை விரைந்து கொடுக்க வேண்டும்.

பொலிஸ், கடற்படை மீது அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே, பொலிஸார் மற்றும் கடற்படை ஆகியவை இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை தீவிரப்படுத்தி, அதன் உண்மைத் தன்மைகளை விபரங்களை விரைவாக வெளிப்படுத்த வேண்டும்” - என்றார். (இ - 03)

## நல்லூர் பிரதேச சபை ‘பட்ஜெட்’ நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 08

யாழ்., நல்லூர் பிரதேச சபை வரவு - செலவுத் திட்டம் 4 மேலதிகமாக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று தவிசாளர் ப. மயூரன் தலைமையிலான கூட்டத்தில் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 12 வாக்குகளும், எதிராக 4 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் அது 4 மேலதிக வாக்குகளால் நிறைவேற் றப்பட்டுள்ளது. (இ - 03)












இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பில்லா-02,நானும் சிங்கிள் தான் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை



**இரவு**
7.00 மணி : பாரதீ



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால
09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம் திங்கள்)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு